JANAVINODINI.

ஜநவிநோதிநி.

இல. 5.] மே மீ 1890. [புஸ்த. XXI.

173

CONTENTS.

Discipline of the Heart	97
Catechism on various subjects	103
The Life of a Bear, Chapter XX	111
Ventriloquism	115
Rules for Conversation	118
News and Notes	120

அட்டவணை.

இதயசுத்தி	97
விவிதவிஷயவிளக்கவினாவிடை	103
ஓர் கரடியின் கதை, 20-ம் அத்தியாயம்	111
உதரபாஷிதம்	115
சம்பாஷணையைப்பற்றிய விதிகள்	118
வர்த்தமானக் குறிப்புகள்	120

MADRAS.

Published by the

MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,

OLD COLLEGE, NUNGUMBAKAM.

ஜநவிநோதிநி.

இல. 5.] மே ௴ 1890. [புஸ்த. XXI.

இதயசுத்தி.

மானிடர்க்குள்ள மனம், வாக்கு, காயம் என்னும் மூன்று கரணங்களுக்குள்ளே மனதினாலேயே விளையத்தக்க தொழில்கள் சில உளவென்றும், வாக்கினாலேயே விளையத்தக்கதொழில்கள் சில உளவென்றும், காயத்தினாலேயே விளையத்தக்கதொழில்கள் சில உளவென்றும் மேலோர் பாகுபாடு செய்திருக்கின்றனர். இவ்வொவ்வொன்றினாலும் உண்டாகத்தக்கதொழில்கள் நல்லனவாகவும் தீயனவாகவுமிருக்கின்றன. அருளுடைமை - அவாவறுத்தல் - அன்புடைமை - ஊக்கமுடைமை - தீவினையச்சம் - நடுவுநிலைமை - பொறையுடைமை - பிறனில்விழையாமை - பண்புடைமை - செய்ந்நன்றியறிதல் என்னும் இவை போல்வன மனதின் நல்லதொழில்களாகும். இவற்றிற்கு மாறானவை மனதின் தீயதொழில்களாகும். வாய்மை - இனியவைகூறல் - புறங்கூறாமை - பயனில்சொல்லாமை என்னும் இவைபோல்வன வாக்கின் நல்லதொழில்களாகும். இவற்றிற்கு மாறானவை வாக்கின் தீயதொழில்களாகும். கள்ளாமை - கள்ளுண்ணாமை - சிற்றினஞ்சேராமை - கொல்லாமை - பிறனில்புகாமை - இன்னாசெய்யாமை என்னும் இவைபோல்வன காயத்தின் நல்ல தொழில்களாகும். இவற்றிற்கு மாறானவை காயத்தின் தீயதொழில்களாகும். இவ்வாறாக நம்முடைய தொழில்கள் அந்தந்தக் கரணத்திற்கேற்றபடி ஒருவாறுபாகுபாடு செய்யப்பட்டிருந்தபோதினும், யூகித்துப்பார்க்குமளவில் இவைகளெல்லாம் உண்மையிலே மனதின் தொழில்களாகவே முடிகின்றன. மனம் இயங்காவிடில் ஏனைய கரணங்களுக்கு இயக்கம் கிடையாது. வாக்கினாலேயாவது காயத்தினாலேயாவது ஒருவன் யாதொரு நற்காரியத்தையாகிலும் தீக்காரியத்தையாகிலும் செய்தானாகில் அந்தச்சமயத்திலே அவன் மனம் அதற்கு இணங்கியிருந்ததா? இல்லையா? என்கிற கேள்வியைக் கேட்டறியவேண்டுவது தர்மசாஸ்திரத்தின் கருத்தாயிருக்கிறது. உன்மத்தனொருவன் மற்றொருவனைப் பலவாறாக வசைச்சொற்களினால் வைதானென்றாவது கொலை முதலிய பாதகங்களைச் செய்தானென்றாவது வைத்துக்கொள்வோம். அப்படிப்பட்டவனுடைய செய்கையைப்பற்றி நியா

பதி விமரிசைசெய்யுங்காலத்தில் அக்காரியங்களை அவன்மன வகமாகச் செய்திலனென்று அவ்வுன்மத்தனை மன்னித்துவிடுகிறோ இவ்வாறே ஒருவன் மேலுக்குமாத்திரம் நற்காரியத்தைச் செய்த ாதினும் அக்காரியத்தை அவன் அகத்தே ஒருகெட்ட எண்ணத்தோடு செய்வானாகில் அவன் அபராதியாகின்றான்.

மேலே காட்டப்பட்ட நியாயங்களினாலே நம்முடைய செய்கைகளுக்கெல்லாம் இதயமே முக்கியகாரணமென்று ஏற்படுகின்றது. அவ்வொன்றைமாத்திரம் நாம் பண்படுத்தித் தீக்குணங்கள் புகவொட்டாதபடி நின்மலமாய் வைத்திருப்போமாகில் எல்லாவிதத்திலும் நாம் ஒழுக்கத்திற் சிறப்படைவோமென்பதற்கு எவ்வளவும் ஐயமில்லை. மனதிலுள்ள அசுத்தங்களை நீக்கிக்கொள்வதற்கு வேண்டிய முயற்சியை நாடாமல் புறத்தே நம்முடைய செய்கைகள் சரியாயிருக்கவேண்டுமென்று முயல்வது-("கொழுநற்கொன்று சந்ததிவேண்டி நோற்குந்தையலோடொக்குமன்றே.") கணவனைக்கொன்றுவிட்டு பிள்ளைப்பேற்றுக்காகத் தவஞ்செய்யும் அறிவிலாமங்கையின் செய்கையை ஒக்கும்.

பெரும்பான்மையோர் நல்லொழுக்கமுடையவர்களாயிருப்பது ஜனங்களுடைய மதிப்பையும் அவமதிப்பையும் நோக்கியேயல்லவா? நாம் நல்லொழுக்கமுடையவர்களாயிருந்தால் நம்மை யாவரும் புகழ்ந்து மதிப்பார்கள், அதனால் நமக்கு உலகத்தில் சகல சவுக்கியங்களுமுண்டாகும், ஒழுக்கத்தில் தவறுவோமாகில் நம்மை யாவரும் இகழ்ந்து அவமதிப்பார்கள், அதனால் பலவகையான துன்பங்களும் விளையும், என்னும் இவைபோன்ற தோற்றங்களே பெரும்பான்மையோருடைய நற்செய்கைகளுக்குக் காரணமாயிருக்கின்றன. மிகச்சிறுபான்மையோர்மாத்திரம் கடவுளுக்குப்பயந்துவிதிவிலக்குகளுக்குட்பட்டு அஞ்சிநடக்கின்றார்கள். இவ்விருவகையாருக்குள்ளே கடவுளுக்குஅஞ்சி நடப்போரே உத்தமர். ஏனெனில் கடவுள் பரமாத்மாவாக அவர்களுடைய உள்ளும் புறமுமிருந்து அவர்களுடையசெய்கைகளையறிந்து அவற்றிற்கேற்ற பலன்களைத்தருவாரென்னும் மனோதிடத்தினால் அவர்கள் தீயகாரியங்களுக்கு அஞ்சநேரிடும். கேவலம் ஜனங்களுடைய மதிப்பை நாடியும் அவமதிப்புக்குப் பயந்தும் நடப்போர் இதயசுத்தி பெற்றிருக்கமாட்டார்கள். அப்படிப்பட்டவர்களும் இதயசுத்திபெற்றிருப்பது அத்தியாவசியம். இதயசுத்தியிருக்குமாகில் புறத்தே அவர்களுடைய செய்கைதானே உலகத்தாருடைய புகழைப்பெறுதற்குரியதாகும். அப்படிக்கில்லாமல் புறத்தேதொழிலுக்கேற்ற அகச்சுத்தியிராவிடில் அதிசீக்கிரம் அவர்களுடைய வஞ்சகத்தன்மை வெளிப்பட்டுவிடும். எத்தனை நாள்தான் ஒருவன் மாறுவேஷம்போட்டுக்கொண்டு உலகத்தில் திரியலாம்? எப்படியிருந்தால் நம்மை நல்லவர்களென்று உலகத்தார் புகழ்வார்களென நாம் கருதுகின்றோமோ அந்தப்படி உண்மையில் உள்ளத்தில் ஆய்விடு

வதே உத்தமம். அகத்தே ஒருமாதிரியாகவும் புறத்தே வேறொருமாதிரியாகவுமிருந்து நடப்போர் தீராமனக்கவலையையும் பயத்தையும் அடைந்தவர்களாகித், தாம் எண்ணியபடி பிறருடைய மதிப்பையும் பெறாமல் தம்முடைய கபடநாடகத்தால் சகலபோக பாக்கியங்களையுமிழந்து யாவராலும் அருவருக்கப்படுவர்.

இவ்வாறின்றி உள்ளும்புறம்பும் நம்மை இடைவிடாது எக்காலத்தும் பார்த்துக்கொண்டிருக்கும் ஜெகதீசரொருவர் இருக்கின்றார், அவருடைய மதிப்பும் அவமதிப்புமே வாஸ்தவத்தில் மதிப்பும் அவமதிப்புமாகும், ஏனையோருடைய புகழ்ச்சியும் இகழ்ச்சியும் ஒருபொருளாகா, என்னும் கருத்துடையவராகி நடப்போர் இகபர சாதனங்களை ஐயமற அடைவர்.

“ அவமதிப்புமான்றமதிப்புமிரண்டு
மிகைமக்களான்மதிக்கற்பால.”

மேன்மக்களுடைய மதிப்பே மதிப்பென்றும் அவர்களுடைய அவமதிப்பே அவமதிப்பென்றும் பிரமாணமிருக்குமானால், சர்வேஸ்வரரைக் காட்டினும் சிறந்தவரெவரும் இல்லையாகையால் அவருக்குப் பிரீதியாக நடந்துகொள்பவர் எவரோ அவரே மதிப்புடையவராவார். அவருக்குப் பிரீதியில்லாதனவற்றைச் செய்பவரெவரோ அவரே அவமதிப்படைந்தவராவார். ஆகையால் ஒரு நொடியில் தோன்றி நின்றழியும் நிலையிலாவாழ்க்கையுடைய ஜனங்களின் புகழை நாடிப் புறத்தே நம் தொழில்களை அவர்களுக்குப் பிரீதியாயிருக்கச் செய்வதைக்காட்டினும், உயிர்க்குயிராயும் சர்வாந்தரியாமியாயும் அநாதியே நம்மை இடைவிடாமல் தொடர்ந்து வருபவராயுமுள்ள சர்வலோகசரண்யரது திருவடி சாட்சியாக நம்முடைய மனதை நின்மலமான ஸ்திதியில் வைத்திருப்பதே மானிடராய்ப் பிறந்த நம் எல்லோருடைய பெருங்கடமையாகும்.

இவ்வகையான நியாயங்களினாலே இதயசுத்தி ஒவ்வொருவருக்கும் அத்தியாவசியமானதென்று ஏற்படுகின்றது. நித்தியநிரதிசயானந்த வின்பத்தை நாடிய பெரியோரெல்லாம் ஒழுக்கத்திற் சிறக்கவேண்டுமென்னும் எண்ண முடையவர்களானபோது இதயசுத்தி ஒன்றையே விரும்பினவர்களாகத் தெரியவருகிறது. அப்படிப்பட்டவர்கள் வேறு எவ்வகையான வரத்தையும் ஈஸ்வரனை நோக்கிக் கேளாமல், பகவானே! மனம் என்னும் யானை என்வசப்படாமல் ஐம்பொறிகளென்னும் வீதிகள்வழியாகப் பிளிறிட்டு ஓடுகின்றது, அதையடக்கி என்வசப்படுத்திக்கொள்ள எனக்கு ஆற்றலில்லை, முறையோ! முறையோ! நீதான் அதை நிறுத்தி என்வசப்படுத்தல் வேண்டும், அங்ஙனம் செய்வார் நின்னையன்றி வேறே யாவருளார்? ஆதலால் நின்னையே சரணாகதியாக அடைந்தேன், அம்மனதை நிறுத்தி எனக்காக நீயேசெலுத்தி நன்னெறிகளில் அதை உய்க்கவேண்டுமென்னும் பொருள்பட,

" மனமெனுங்வயமாவென்வயப்படாமன்மயங்குறுமைம்புலன்றி
மறிபடாதோடுகின்றதுமுறைமோமறித்ததைநிறுத்திடுமென்றனக்கு
நினையலதுதவுவாரிலையதனுனினைப்பரவுற்றன்னதனை
நிறுத்திநீயிவர்ந்துபின்னர்நீவேண்டுநெறிகளிற்சென்றிடுவாய்."

எனத்தனித்தனியே ஆங்காங்கு கூறியிருக்கின்றனர்.

இதயசுத்தி நாம் உலகத்தில் விரும்பத்தக்க யாவற்றினும் முக்கியமானதாயிருக்கிறபடியால் அதைப் பெறுவதற்குரிய சில சாதனங்களை அடியில் காட்டுகிறோம்:—

முதலாவது.—மனச்சாட்சிக்கு ஏற்க எக்காலத்தும் எல்லாவகையாலும் நடப்பதற்கு ஒவ்வொருவரும் முயலவேண்டும். ஒருவன் எந்தவூரானாகவாவது எந்தஜாதியானாகவாவது எந்த மதஸ்தனாகவாவதிருக்கினும் அவனுடைய தேசாசாரம், குலாசாரம், மதாசாரமாகிய இவற்றிற்கேற்க ஓர்வகை மனச்சாட்சி அவனிடத்திருக்கின்றது. அவன் நிற்கவேண்டிய நிலையினின்றும் சிறிது பிறழ்வானாகில் உடனே அவனுடைய மனச்சாட்சி உண்ணின்று இது சரியல்லவென்று எச்சரிக்கை பண்ணும். இம்மனச்சாட்சியை ஈஸ்வர சொரூபமென்றே சிலமதவாதிகள் கூறுநிற்பர். தீநெறியில் பிரவேசிக்க ஒருவனுக்குக் கெட்ட எண்ணமுண்டாகும்போது உடனே அது தகாதென்று சொல்லும் சக்தி அம்மனச்சாட்சிக்கிருக்கினும் அவ்வெண்ணத்தை முற்றும் அகத்தினின்றும் நீக்கும் சக்தி அதற்குக்கிடையாது. மனச்சாட்சி இந்தப்படி செய்யும் எச்சரிக்கையை அலட்சியம் செய்து தீநெறியில் புகுவோனுக்கு வேறே புறப்பகை வேண்டுவதில்லை. தன் அகப்பகையாகிய மனச்சாட்சி ஒன்றே அவனை நிரயத்துன்பத்திற்குள்ளாக்கும். ஒவ்வொருவனுடைய மனச்சாட்சியும் அவனவனுடைய தேசாசாரம், மதாசாரம், குலாசாரம்முதலியவற்றிற்கிணங்கவே அபிப்பிராயங் கூறுமாகையால், அது அவ்வாறு கூறுவது எதார்த்தத்தில் தப்பாயிருக்கினும் சரியாயிருக்கினும் அதன் சொல்லின் யுக்தாயுக்தத்தை யோசிக்காமல் அதனுடைய அபிப்பிராயத்திற்கு ஒத்து நடப்பதே எக்காலத்தும் மனச்சந்துஷ்டிக்கிடமாகும். சிலர் மனச்சாட்சியின் புத்தியை முதலில் கேளாமல் தீநெறியில் பிரவேசித்துவிட்ட பிறகு அம்மனச்சாட்சி சதா தங்களை உள்ளே சுட்டுக்கொண்டிருப்பதைச் சகிக்காதவர்களாகித், தாங்கள் செய்துவிட்ட தீயகாரியங்களுக்குச் சில குதர்க்கமான நியாயங்களைக் கற்பித்து அம்மனச்சாட்சி அதை ஒப்புக்கொள்ளும்படி முயலுகிறார்கள். இது அதிக கஷ்டமான காரியம். அவ்வாறு கஷ்டப்பட்டும் அம்மனச்சாட்சி தங்களுக்குச் செய்யும் வேதனையை அவர்கள் பொறுக்கக் கூடாதவர்களாகி மேலும் மேலும் பற்பல வீணான சமாதானங்கற்பித்துச் சந்துஷ்டியடையப் பார்க்கிறார்கள். சில வருடங்களுக்கு முன்னே ஒருவன் தன் நண்பனொருவனுடைய கல்வி செல்வமுதலிய வளப்பத்தைக் கண்டு பொறாமை மிகுதியினால் அவனுண்ணும் உணவில் விஷங்கலந்து அவனைக்கொன்றுவிட்டான். அக்கொடியோன் நிரபராதியாயிருந்த தன் சிநேகனைக்

கொலைசெய்யத் துணிந்தபோது அவனுடைய மனச்சாட்சி உள்ளிருந்து, "நீ செய்யுங்காரியம் முற்றும் தகாது." என்று எச்சரிக்கைபண்ணியது. அவன் அதை அலட்சியஞ்செய்து அதன்வாயை அடக்கி அங்கிரபராதியைக்கொன்றான். இவ்வாறு அவன்கொலைபுரிந்தது பிறர் எவருக்குந் தெரியாது. ஆகையால் அவனுக்கு இராஜதண்டனைமுதலிய தீமைகள் விளையுமென்கிறபயமுமில்லை. அப்படியிருந்தும் மனச்சாட்சிக்கு ஒவ்வாதகாரியத்தை அவன்செய்துவிட்டபடியால் அது அவனைச் சதா[illegible] சுட்டுக்கொண்டேயிருந்தது. அதன்கொடுமை இவ்வளவவ்வளவல்ல. இதைத்தான் சிலர் பிரமஹத்தியென்றுங் கூறுவார்போலும்! அதுநிற்க.

தன்பிதாவைக் கொன்றவனாகிய ஒரு பிராமணனைப் பிரமஹத்தி வந்து பிடித்துப் பலவாறாக வருத்தி அவனை எங்கும் அலக்கழித்ததென்று ஆலாசியமான்மியமென்னும் திருவிளையாடற்புராணத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. அம்மகாபாதகனுக்கு அந்த பிரமஹத்தி செய்த கொடுமைகளைப்பற்றிக் கூறியிருக்கும் செய்யுட்களைச் சிறிது யோசிப்போம்.

"ஆவவென்னுமழுஞ்சிவதாவெனும்
பாவம்பாவம்பழியிதுவோவைய
கோவெனுங்கைகுலைத்தெறியுங்கிழற்
பாவைபோலவிடாதுபின்பற்றுமால்."

(அந்த பிரமஹத்தி, ஐயோ என்று அலறும். அழும். சிவனே என்னும். அக்கொலையாளியைப்பார்த்து இதுபெரும்பாவம், இது பெரும்பழி, என்னும். ஓ! ஐயோ! என்று முறையிடும். கைகளைமோதி அலறி அடிக்கும். ஒருவன் தேகத்தின் சாயையைப்போல அவனைச் சற்றும்விடாது அவன் எங்கு சென்றாலும் அவன் பின்னேயே செல்லும்.)

"நல்லதீர்த்தஞ்சிவதலநலோர்பக்கமுஞ்
செல்லவொட்டாதரன்சீர்த்திநாமஞ்செவிப்
புல்லவொட்டாதுளம்புகுதவொட்டாதுநாச்
சொல்லவொட்டாதுகண்டுயிலவொட்டாதரோ."

(நல்லதீர்த்தங்களிற் போய் ஸ்நானம் பண்ணவும் சிவக்ஷேத்திரங்களுக்கும் சாதுக்களிருக்குமிடங்களுக்கும்போகவும் ஒட்டாது. பகவானுடைய திருப்புகழைச் செவிகளால் கேட்கவும் ஒட்டாது. அவனைத் தியானிக்கவும் ஒட்டாது. அவனை நாவால்ஸ்தோத்திரஞ்செய்யவும் ஒட்டாது. தூங்கவும் ஒட்டாது.)

"சுற்றுமுன்பின்புறச்சூழ்ந்துதன்கொடுக்கிறப்
பற்றிநின்றீர்க்குமாபாதகத்தாலலைந்
தெற்றினிச்செய்வதென்றுற்றலாதிடருழந்
துற்றவேறுலகெலாமச்சமுற்றுழலுமால்."

(முன்னும் பின்னுமாக நாற்புறமும் சூழ்ந்துகொண்டு அவனுடைய கொய்சகம் அவிழ்ந்தலையும்படி அதைப்பற்றிஇழுத்துத்தன்னைவருத்தும் பிரமஹத்தியினால் அப்பாதகன் அல்லற்பட்டு இனி யாது செய்வதென்று திகைத்து அதன் துன்பத்தைச் சகியாதவனாகி வருத்தமுற்றுப் பயத்தோடு உலகமெல்லாம் திரியலுற்றான்.)

பிரமஹத்தியைப்பற்றி இங்கு சொல்லப்பட்டிருக்கும் விஷயத்தை யோசித்துப் பார்க்கையில் அக்கொடியோனுடைய மனச்சாட்சியின் வேதனையையே புராணிகர் உருவகப்படுத்தியிருப்பதாகத் தெரியவருகிறது. அதுநிற்க.

தனக்கு ஒருவிதத்தீங்கும் செய்யாத நண்பனைக்கொன்றனென்று மேலே யாம்கூறிய தீயோன் தன்னை அப்படியெல்லாம் மனச்சாட்சிவேதனைசெய்துகொண்டுவந்தபோது ஒருசமாதானம் தனக்குள்ளே செய்துகொண்டான். ஐயோபாவம்! இப்போது என்னால் விஷமூட்டிக்கொல்லப்பட்டவனாகிய நண்பன் இவ்வுலகத்திலிருந்து நெடுங்காலம் பிறவித்துன்பத்திற்குள்ளாகி அல்லற்படவேண்டுமே! இவ்வுலகவாழ்க்கை

"இணைதரும்பிறவியிலிடராலாதொரு
கணமதுமிலையெனக்கண்டுநொந்தனன்."

என்று பெரியோர்கூறியபடி, எக்காலத்தும் அல்லலுக்கிடமாகையால் அதினின்றும் என் நண்பனை நான்கூடிய சீக்கிரத்தில் நிவர்த்திசெய்துவிட்டேன், இதைவிடப் பேருதவி என் நண்பனுக்கு நான்செயற்பாலது யாது? இப்போது நான் அவனைக் கொன்றிராவிட்டால் அவன் என்றைக்கும் இவ்வுலகத்தில்நிலைத்திருப்பானோ? எப்போதாவது அவன் ஒருகாலத்தில் இறக்கவேண்டியவன்தானே, என்னால் இவ்வாறு அவன் இறக்கவேண்டியவிதி அவனுக்கிருந்தபடியினாற்றான் ஈஸ்வரன் எனக்கு இப்படிப்பட்ட புத்தியைக்கொடுத்தார், விதியைவிலக்க யாரால்முடியும்? வருவது வந்தேதீரும், என்றுஇவைபோன்ற உதவியற்ற நியாயங்களைக்கொண்டு தன் மனச்சாட்சியைத் தான் செய்தகொலைபாதகத்தைச் சரியென்று ஒப்புக்கொள்ளச் செய்தான். அப்படிச்செய்தும் அவன்மரிக்கும்பரியந்தம் அவன்மனச்சாட்சி அவனை வருத்தாமல் முற்றும் விடவில்லை.

இதைப்போன்றவிர்த்தாந்தங்களை நாம் வாசித்துப்பார்க்கும்போது மனச்சாட்சியின் வேதனை இவ்வளவவ்வளவல்லவென்றும், அதற்குவிரோதமான காரியத்தை ஒருவன்செய்து எக்காலத்திலும் சுகமடைவதில்லையென்றும் தெரிந்துகொள்ளலாம். இதை நாமே அநுபவத்திலுங் காணலாம்.

இவ்வாறே உலகத்தாருடைய மதிப்பையும் அவமதிப்பையும் ஒருபொருளென மதியாது எவனொருவன் தன்மனச்சாட்சிக்கு ஏற்க நடந்துகொண்டு வருகின்றானோ அவன் எவ்வளவு வறியவனாயிருக்கினும், புறத்தே எவ்வளவு துன்பத்திற்குள்ளாயினும் அவன் இருந்தவிடத்திலிருந்தே இந்திரபோகத்தினும் மேம்பட்ட இன்பத்தை யடைந்தவனாவான். உலகத்தில் நாம்செய்யும் நன்மை தீமைகளுக்கு இனிமறுஉலகத்தில் சொர்க்க நரகத்தில் சுகதுக்கங்களை அநுபவிப்போமென்று மத சித்தாந்தங்கள் கூறுவது ஒருபுறமிருக்கட்டும். நாம் மனச்சான்றுக்கு விரோதமாக இவ்வுலகத்திற்செய்யும் நன்மை தீமைகளுக்கு இவ்விடத்திலேயே இப்போதே சுகதுக்கங்களை அநுபவிக்கின்றோம்

என்பதே எம்முடைய கோட்பாடு. நற்காரியம் செய்ததற்காக அக்காரியத்தைச்செய்தபோதும் பிறகு அதைநினைக்கும்போதும் உண்டாகும் மனச்சந்துஷ்டியே ஒருவனுக்குப் பிரதிபலனாகுமென்றும், தீக்காரியம் செய்ததற்காக அக்காரியத்தைச்செய்தபோதும் பிறகு அதைநினைக்கும்போதும்உண்டாகும் மனத்துயரமும் வேதனையுமே ஒருவனுக்குத் தண்டனையாகுமென்றும் பொருள்பட ஆங்கிலேய கிரந்தகர்த்தரொருவர் அழகாயெழுதுகிறார். (இன்னும் வரும்.)

விவிதவிஷயவிளக்கவினாவிடை.

இணையிலாஞானபூரணராகிய கடவுள் பல்வேறுயிர்களும் உய்யும்பொருட்டு ஆக்கியளித்தழிக்கும் இவ்வுலகம் சரம் அசரம் என இருவகைப்படும். சரப்பொருளைத் தமிழர் நிலையில் பொருளென்றும் அசரத்தை இயங்கியற்பொருளென்றும் கூறுவர். இப்பொருள்களெல்லாம் கடவுளின் ஆணையாலே ஒன்றுக்கொன்று உதவிபுரிந்துவருகையில் அவற்றினிடமாக அறிவிறந்த விசித்திரங்கள் விளங்குகின்றன. அவ்விசித்திரங்களையெல்லாம் எவனொருவன் நன்றாய்க்கண்டறிகின்றானோ அவனே அவற்றைப் படைத்து இயக்கும் பரமபதியின் ஆற்றலுடைமையையும் கருணையையும் உணர்வான். அவ்வுணர்ச்சிகாரணமாக, அவரிடத்து அவனுக்குப் பக்தியுண்டாகும். ஈஸ்வரபக்தியினால் ஒருவனுக்குச் சித்தியாகாததும் உண்டோ? ஒருகிரந்தகர்த்தருடைய சொல்நயங்களையும் பொருள்நயங்களையும் நன்றாயுணரப்பெற்றவன் அவருடைய நுண்ணறிவைப்பலவாறாக வியந்து அவரைவழிபடுகடவுளாகவும் தியானிக்கத் தொடங்குவதை நாம் உலகத்தில் பிரத்தியட்சமாகக்காணலாம். அதுபோலவே இவ்வுலகமுழுவதையும் ஒரு பெருங்கிரந்தமாகவும், இதிலுள்ள ஒவ்வொரு பதார்த்தத்தின் குணவிசித்திரத்தையும் சொல்நயம் பொருள்நயம் முதலிய ஒவ்வொருவகையான சுவையாகவும், முழுதொருங்குணர்ந்த கடவுளையே கிரந்தகர்த்தராகவும் அனேககவிகள் உருவகப்படுத்தியிருக்குமாறு நாம்பாவிப்போமாகில், இவ்வுலகத்திலுள்ள சராசரப்பொருள்களின் குணவிசித்திரத்தை நாம் அறியுந்தோறும் அவற்றை இயக்கும் பகவானுடைய பெருமையையும் பேரருட்டிறத்தையும் நாம்உணர்ந்து அவரிடத்து பக்தியடையப்பெற்று அவரையே சரணாகதியடைவதற் கிடமிருக்கும்.

இவ்வுலகத்தில் இதுவரையிலே தோன்றிய மஹாபுத்திமான்களாகிய தத்துவசாஸ்திரிகளெல்லாம் கடவுளால் ஆக்கப்பட்ட இவ்வுலகமென்னும் பெருங்கிரந்தத்திலுள்ள ஒவ்வொருபதார்த்தத்தின் குணவிசித்திரமென்னும் நயத்தை உணர்ந்தே இக்காலத்தவராகிய நம்மவர்க்கு ஒருபெரும்வைப்பாக அநேக விஷயங்களின் காரணகா

ரியங்களைக் காட்டிவைத்திருக்கின்றனர். அவர்களையெல்லாம் கடவுள் என்னும் கிரந்தகர்த்தரால் ஆக்கப்பட்ட இவ்வுலகமென்னும் பெருங்கிரந்தத்திற்குப் பாஷ்யகர்த்தர்களாக நாம்கொள்ளவேண்டும். அவர்களுள் தத்தம் ஆராய்ச்சிக் கேற்றபடி சிலர் தத்துவ சாஸ்திரிகளாகவும், சிலர் ரசாயனசாஸ்திரிகளாகவும், சிலர் பிருதிவுமுதலிய பூதலட்சண சாஸ்திரிகளாகவும், சிலர் மனோதத்துவலட்சண சாஸ்திரிகளாகவும், சிலர் தாவரலட்சணசாஸ்திரிகளாகவும், சிலர் வான்சாஸ்திரிகளாகவும், சிலர் மிருகலட்சணசாஸ்திரிகளாகவும், சிலர்பட்சிலட்சணசாஸ்திரிகளாகவும், மற்றும் சிலர்இன்னும்சில விஷயங்களையுணர்ந்த சாஸ்திரிகளாகவும் இருந்தனர். இவர்களெல்லாம் இவ்வுலகமென்னும் கிரந்தத்தின் ஒவ்வொரு பாகத்திலே பாண்டித்தியமடைந்தது எவ்வாறென்று சிறிது ஆலோசிப்போம். இவர்கள் பாலியகாலந்தொடங்கித் தாம்கண்ட கண்டபொருள்களைப்பற்றிய காரணகாரியங்களைத் தமக்குள்ளே விசாரித்து ஆராய்ச்சிசெய்யும் இயல்பையுடையவர்களாயிருந்தார்கள். நாளாவர்த்தியில் இவ்விசாரம்பெருகப்பெருக அவர்கள் தங்களுடைய தேகத்தைப்பற்றிய சுகதுக்கத்தையும் ஒருபொருளென மதியாது,

"மெய்வருத்தம்பாரார்பசிநோக்கார்கண்டுஞ்சா
ரெவ்வெவர்தீமையுமேற்கொள்ளார்—செவ்வி
யருமையும்பாராரவமதிப்புங்கொள்ளார்
கருமமேகண்ணாயினார்."

என்றபடி மனச்சோர்வடையாமல் அயர்விலாவூக்கத்துடன் ஆராய்ச்சி செய்துகொண்டேபோய் உண்மையையறிந்து அதைப்பலமுகத்தாலும் யாவர்க்கும் மெய்ப்பித்து மகிழ்வெய்தினரென்று அவர்களுடைய சரித்திரத்தால் விளங்குகின்றது. அவர்களெல்லாம் அவ்வளவு அருமையான விஷயங்களை உணர்ந்தது ஏதோ சில புஸ்தகங்களைமாத்திரம் வாசித்து உயர்ந்த பரீட்சைகளில் தேறிவித்தியாபட்டம் பெற்றதனாலல்ல. ஆனால் அவர்கள் தம்முடைய கண்ணுக்குப் புலப்பட்ட விஷயங்கள் எவ்வளவு அற்பமானவைகளாயிருக்கினும் அவற்றின் காரணகாரியங்களை நடுவுநிலைமையுடன் வினாக்கள் ரூபமாகச் சதா ஆராய்ச்சிசெய்துவந்ததனாலேதான். (Newton)நியூட்டன் என்னும் மஹாபண்டிதோத்தமர் உலகத்தார்க்குச்செய்த பேருதவியை நாம் என்னென்று சொல்வது! இப்படிப்பட்டவர் பெருத்த உண்மைகளை அறிந்ததற்குக் காரணமேதுவென்று பார்க்குமிடத்துவிஷய ஆராய்ச்சியென்றே தெரியவருகிறது. ஒருநாள் ஒரு இலங்கைப்பழம் மரத்தினின்றும் பொத்தென்று வீழ்வதைக்கண்ட அவர், இக்கனி பழுத்து இம்மரத்தைவிட்டு நீங்கும்போது மேலேயாவது பக்கத்திலாவது போய்விழாமல் நேராகக்கீழே ஏன் விழவேண்டும் என்னுங்கேள்வி அவருடையமனதில் தோன்றியது. சந்தேககாரணமாக எழுந்த இவ்வினாவினாலல்லவா பதார்த்தங்களுக்கு ஆகருஷ

ணசக்தியென்னும் ஓர்வகைக் கவர்ச்சித்தன்மை யுண்டென்பதும், அவ்வுண்மைவாயிலாக ஒவ்வொரு பொருளின் நுண்ணிய அணுக்களுக்குப் பிண்டீகர கருஷணசக்தியென்னும் ஓர் வகைக்கவர்ச்சித்தன்மை யுண்டென்பதும், இந்தப் பூமிக்கே கரிமகருஷணசக்தி யென்னும் ஓர்வகை இழுக்கும் சக்தியுண்டென்பதும் உலகத்தார்க்கு விளங்கின ?

இவ்வாறே, தற்காலத்தில் நாம் அநுபவிக்கும் சகல போகபாக்கியங்களுக்கும் நமக்குமுன்னிருந்த விசாரபுருஷர்களுடைய ஆராய்ச்சியே காரணமென்பதை மறுக்கவல்லவர்யாவர் ? ஆயிரமைல் தூரத்திற் கப்புறத்தேயுள்ள நம் உற்றாருடன் இங்கிருந்து நாம்தந்திமார்க்கமாய்ப்பேசுவதும், புகைவண்டித்தொடரிலேறி நோவாமல் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு ஒரு நொடியிற்போவதும், காற்று-மழை-அலை-மகரமீன் முதலியவற்றை ஒரு பொருளெனமதியாமல் அகன்றகடல்களை நாவாய்களில் நாம் கடந்துபோவதும்,இடி-மின்னல் முதலியவற்றால் நமக்கு ஆபத்து நேரிடாதபடி நாம் சுகமாய்மாடமாளிகைகளில் சாளரவழியாகத்தென்றல் வீசவசித்து மகிழ்வதும், யானைமுதலிய துஷ்டமிருகங்களும் முறிகள்போல் நாமிட்ட ஏவலைச்செய்து நமக்குச்சுகத்தைத்தருவதும், உயிரை அல்லும்பகலும் வருத்தத்தக்க பிணிகளைப்போக்கும் ஔஷதங்கள் கிடைத்திருப்பதும், இவைபோன்ற பலமுகத்தாலும் நாம் சுகங்களை யநுபவிப்பதும் கண்டகண்ட பொருள்களைப்பற்றியெல்லாம் உயிரையும் ஒருபொருளென மதியாமல் ஆராய்ச்சிசெய்த உத்தமபுருஷரால் நமக்களிக்கப்பட்ட பிரசாதமல்லவா ? இவ்வளவு நன்மைகளையும் உலகத்தார்க்குச்செய்த புருஷரத்னங்களாகிய சாஸ்திரிகளெல்லாம் ஆராய்ச்சியையே தமக்கு அணிகலமாகக்கொண்டனராதலின் இப்பத்திரிகையில் நாமும்“விவிதவிஷயவிளக்கவினாவிடை.”என்னும் தலைப்பெயரிட்டு அனேக விஷயங்களைக் கூடியவரையில் எளிய நடையிலேயாவர்க்கும் உபயோகமாகும்படி விளக்குவோம். நானாவிதமான விஷயங்களின் உண்மைகளை விளக்கும்பொருட்டு வினாவிடை ரூபமாக இப்பத்திரிகையின் இந்தப்பாகம் எழுதப்படுகிறபடியால் இதற்கு இத்தலைப்பெயர் மகுடமாகச் சூட்டப்பட்டது.

தனபதி என்னும் ஒருவன் தான் அருமையாகப் பெற்றெடுத்த புத்திரனொருவனுக்கு விசாரகனென்னும் பெயரிட்டு அவனை நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாக வளர்த்துவருகையில் அப்புத்திரன் மூன்றாவது நான்காவது வயதிலேயே அனேக விஷயங்களைப்பற்றிச் சந்தேகித்து, சந்திரன் ஏன் உண்டையாகவும் வெண்மையாகவு மிருக்கிறது? சூரியன் ஏன் வெப்பமாக இருக்கிறது? தண்ணீரைக் கீழேவார்த்தால் அது ஏன் சரசரவென்று ஓடுகிறது? கண்ணிமை ஓரங்களிலே மயிர் ஏன் இருக்கிறது? காது ஏன் நானாவிதமாகவளைந்தும் குறுகியும் நீண்டும் சங்குபோல் சுழன்றும் இருக்கிறது ?

பார்க்கும் கருவியாகிய கண் முகத்திலேன் இருக்கவேண்டும்? பட்சிகளுக்கு இரண்டுகால்களும் மிருகங்களுக்கு நான்கு கால்களும் ஏன் இருக்கவேண்டும்? தீபம் ஏன் மேல்நோக்கி எரிகிறது? தீ ஏன் சுடுகிறது? ஜலம் ஏன் ஜில்லென்றிருக்கிறது? புகை ஏன் மேலெழுகிறது? கல் ஏன் கீழேவிழுகிறது? என்னும் இவைபோன்ற கேள்விகளை அல்லும்பகலும் இடைவிடாமல் சதாகேட்டுக்கொண்டுவந்தான். யால் அவைகளுக்கெல்லாம் தனபதி திருப்திகரமான விடைகொடுக்கச் சக்தியற்றவனாயிருந்தபடியினாலே சிலநாள் பொறுத்து அப்பிள்ளைக்கு வித்தியாரம்பஞ்செய்ய நிச்சயித்து, சகலகலாநிதி என்னும் ஓராசிரியரிடத்துக் கொண்டுபோய்விட்டு, ஐயா! தாங்கள்மிகவும் பொறுமைசாலியென்றும், சகலகலைகளிலும் வல்லவரென்றும் நெடுநாளாயெனக்குத் தெரிந்திருக்கிறபடியால், என்புத்திரனுக்கு விவேகவிளக்கம் நன்றாய் வருமளவும் தாங்களே வைத்திருக்கவேண்டும், அவன் விஷயமாய்ப் பிடிக்கும் சகலசெலவுகளுக்காகவும் தங்களுடைய சிரமபரிகாரத்திற்காகவும் நான் மாதம் ஆயிரம்ரூபாய்கொடுத்து வருகிறேனென்று சொல்ல, அதற்கு அச்சகலகலாநிதி உடன்பட்டு அப்புத்திரனைத் தன்வசத்தில் வைத்துக்கொண்டு தனபதிக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டார்.

விசாரகன் இடைவிடாமல் ஆராயும் இயல்பை அறிந்துகொண்ட சகலகலாநிதி என்னும் ஆசிரியர்-இவனுக்குச் சாங்கோபாங்கமாகக் கல்வியைமாத்திரங் கற்றுக்கொடுப்போமென்றால் இவன் அடிக்கடி கேள்விகள்கேட்பதிலேயே நாட்டமுடையவனாயிருக்கிறானாகையால் இவனுக்குக் கல்விகற்றுக் கொடுக்குநேரம்போக மற்றவேளைகளில் இவன் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் கூடியவரையில் இவனுடைய உணர்ச்சிக்கேற்றபடி விடையளித்துத் திருப்திசெய்துவரவேண்டுமென்று நிச்சயித்துச் சீடனைநோக்கி, அப்பா! நீசாங்கோபாங்கமாக என்னிடத்தில் கல்விகற்றுக்கொண்டு வருகிறநேரம்போக மற்றக் காலங்களில் உனக்குத் தோன்றும் சந்தேகங்களை யெல்லாம் எனக்கு நீ விசதமாய்த் தெரியப்படுத்துவாயானால் நான் உன்னுடைய அநுபவத்திற்கும் விவேகத்திற்கும் ஏற்றபடி விடைசொல்லிக்கொண்டு வருகிறேனென்றார். இதுகேட்டுச் சீடன் பெருமகிழ்ச்சிகொண்டு அடியில் வருமாறு பலவிஷயங்களைப்பற்றி வினாக்கள்கேட்க ஆசிரியர்பின் வருமாறு விடையளிக்கலானார்:—

1. சீடன்.—மழை என்பது யாது?

ஆசிரியர்.—இப்பூமியிலுள்ள சமுத்திரம் - நதி - ஏரி - குளம் - கூவல் முதலிய நீர்நிலைகளினின்றும் சூரிய உஷ்ணத்தினாலே ஜலத்தின் நுண்ணிய அணுக்கள் ஆவியாய் மேலெழும்பி மேகங்களாய் ஆகாயத்தில் தங்கியிருந்து பிறகு அவை நீர்த்துளிகளாகப் பூமியில் விழுகின்றன. இவ்வாறுவிழும் ஜலத்திரளைத்தான் மழையென்பது.

2. வி.—நீர்நிலைகளினின்றும் ஆவியாய் மேலெழும்பி மேகமாயியங்கும் ஜலத்திரள் மறுபடியும் ஜலரூபமாக ஏன் இறுகவேண்டும்?

ஆ.—உஷ்ணமாயுள்ள நீராவிமயமான மேகத்துக்கும் நாம்வசிக்கும் பூமிக்கும் இடையே சீதளக்காற்று இயங்கும்போது உடனே மேலிருக்கும் அவ்வுஷ்ணமயமான ஆவி ஜலரூபமாக இறுகிக் கீழேவிழுகிறது.

3. வி.—உஷ்ணமான ஆவி சீதளக்காற்றைத் தாக்கும்போது அது ஜலமாயிறுகவேண்டுவது என்? அதற்கு ஏதாவது பிரத்தியட்சப் பிரமாணம் காட்டுவீரா?

ஆ.—ஆம். காட்டக்கூடும். குளிர்காலத்தில் நாம் ஒருநெருங்கிய அறைக்குள்ளே சில தீபங்களையும் இருப்பு அடுப்பையும் வைத்துக் குளிர்காய்ந்துகொண்டிருக்கையில் குளிர்காற்று வெளியிலிருந்து உள்ளே புகாதபடி நாற்புறமும் அவ்வறையின் கண்ணாடிக்கதவுகளையெல்லாம் நன்றாய்மூடி விடுகிறோமல்லவா? அப்போது அவ்வறைக்குள்ளேயிருக்கும் நிச்சலவாயு மிகவும் உஷ்ணமாய்விடுகிறது. அந்த அறைக்கு வெளியே வீசும் சீதளக்காற்றினாலே கண்ணாடிச் சாளரங்கள் ஜில்லென்று இருக்கின்றனவல்லவா? அப்போது அக்கண்ணாடிச்சன்னலின் உட்புறமாக அறைக்குள்ளிருக்கும் நமக்குத்தெரியும்படி அக்கண்ணாடிகளிலே ஜலம் முத்துக்களைப்போல் அரும்பிவழிந்து ஓடுகிறதல்லவா? அறைக்குள்ளேயிருக்கும் உஷ்ணமான நிச்சலவாயு ஜில்லென்றிருக்கும் அக்கண்ணாடியைத் தாக்கும்போது அந்த உஷ்ணமான நிச்சலவாயுவானது ஜலத்திரள்களாகக் கண்ணாடியின்மேல் தோன்றுகின்றன. இன்னுமொரு உதாரணங் காட்டுகிறேன்:—மேலே சொல்லிய அறைக்குள்ளே ஒரு மட்பாத்திரத்தில் மிகவும் ஜில்லென்றிருக்கிற தண்ணீரை வார்த்து ஒருபுறம் வைப்போமாகில் அப்பாத்திரத்தின் மேற்புறமாகப் பக்கங்களில் தண்ணீர் அரும்பி ஒழுகிக்கொண்டேயிருக்கும். சாதாரண ஜனங்கள் அப்பாத்திரத்திற் குள்ளிருக்கும் குளிர்ந்த ஜலம் கசிந்து வெளியே வருகிறதென்று மதிமயக்கங் கொள்ளுவார்கள். அந்த அறைக்குள்ளிருக்கும் உஷ்ணமான நிச்சலவாயு சீதளப்பொருளான அப்பாத்திரத்தைத் தாக்கிய மாத்திரத்தில் அதன்பக்கங்களிலே ஜலரூபமாக அந்தவாயு இறுகிவிடுகிறது. இவ்விரண்டு உதாரணங்களினாலே உஷ்ணமாயுள்ள நீராவிமயமானமேகம் குளிர்காற்று தன்னைத் தாக்கும்போது ஜலமாயிறுகி மழையாய்க் கீழ்விழும் விசித்திரத்தை நீ அறிந்துகொள்ளலாம்.

4. வி.—நிச்சலவாயு என்பதுயாது?

ஆ.—வாயு எங்கும் உள்ளபொருள். அது அலைமோதி இடம் விட்டுப் பெயர்கையில் அதற்குக்காற்று என்றுபெயர்; அங்ஙனமின்

றி இயக்கமற்று நின்றநிலையிலிருக்கும்பொழுது. அதற்கு நிச்சலவாயு என்றுபெயர். இதுதான் நமக்குப்பிராணாதாரமாயுள்ளது.

5. வி.—பூமியிலுள்ள நீர் நிலைகளினின்றும் எக்காலத்தும் ஒரே மாதிரியாக ஜலம் ஆவியாய் மேலெழுந்து போகின்றதா?

ஆ.—இல்லை. சூரிய உஷ்ணம் அதிகமாயிருக்கும் மாதங்களிலே அதிகமாய் நீர் நிலைகளினின்றும் மேலெழும்பும். மற்றக்காலங்களில் குறைவாயெழும்பும்.

6. வி.—பூமியிலுள்ள நீர்நிலைகளிலிருக்கும் ஜலம் ஜீவராசிகளுக்குப் போதுமானவையாயிருக்க அதை ஆவியாய் மேலேகொண்டுபோய் மழைரூபமாக ஏன் கடவுள் நமக்குத்தரவேண்டும்?

ஆ.—இப்பூமியிலுள்ள சாராசங்களால் நீர் நிலைகளெல்லாம் அசுத்தப்பட்டுப்போய்விடுகிறபடியினாலே பிராணாதாரமாயுள்ள ஜலத்திலிருக்கும் அசுத்தங்களைப் போக்கும்பொருட்டே கடவுள் அந்த ஜலத்தின் அணுத்திரள்களை மேலே ஆவியாய்ப்போகச்செய்து மீண்டும் நமக்குச் சுத்தஜலமாக வர்ஷிக்கச்செய்கிறார். மேலும் ஜலம் எவ்வளவு ஏராளமாய் அந்தந்த நீர்நிலைகளிலேயிருந்தபோதிலும் அதைப் பயிர்முதலியவற்றிற்கு உபயோகமாகும்படி செய்யவும், மனிதர்களுடைய கண்ணுக்குப் புலப்படாத காடு மலை முதலியவற்றிலுள்ளவிருட்சங்களுக்கும் ஜீவராசிகளுக்கும் உதவும்படி செய்யவும் யாரால்முடியும்? அன்றியும் ஆகாயத்தில் எங்கும் நிறைந்துள்ள நிச்சலவாயுவானது ஜீவராசிகளின் உச்சுவாசநிச்சுவாசத்தாலும் மற்றும் துர்க்கந்தமான பதார்த்தங்களினாலும் அசுத்தப்பட்டுப்போய் விடுகிறபடியால் அவ்வசுத்தத்தை ஒழிப்பதற்கு மழைத்தாரைகள் தக்க கருவியாயிருக்கின்றன.

7. வி.—மேகங்கள் சாதாரணமாய் பூமிக்கு எவ்வளவு தூரத்திலிருந்து மழையாய்க் கீழேவிழுகின்றன?

ஆ.—இது பற்பல இடங்களில் பற்பல மாதிரியாயிருக்கும். சில சமயங்களில்மேகம் உயர்ந்தது இருபத்து நாலாயிரம் அடியிலிருந்து மழைபொழியும்; மற்றச்சமயங்களில் இரண்டாயிரம் அடிமுதல் ஐயாயிரம் அடிவரையில் உயர்ந்தும் தாழ்ந்துமிருக்கும். சில இடங்களிலே மேகங்கள் பூமியைத் தொடும்படியான அவ்வளவு சமீபத்திலிறங்கியும் விடுகின்றன. இதெல்லாம் அந்தந்த தேசத்தின் சீதோஷ்ண நிலைமைக்குத் தக்கபடி மாறிக்கொண்டிருக்கும்.

8. வி.—பள்ளத்தாக்குகளிலேயுள்ள ஊர்களில் பெய்யும்மழைத்துளிகள் பருத்தும், உயர்ந்து மேடாயுள்ள ஊர்களில்பெய்யும்மழைத்துளிகள் சிறுத்தும் ஏனிருக்கவேண்டும்?

ஆ.—ஏனெனில், பள்ளத்தாக்கிலுள்ள ஊர்கள் உயர்ந்த மேடாயுள்ள ஊர்களைக்காட்டிலும் மேகமண்டலத்துக்கு மிகவும் தூரமாயிருக்கின்றபடியால் மழைத்தாரைகள் மேலிருந்து கீழே நெடுந்

தூரம் யாத்திரை செய்யச்செய்ய ஒன்றோடொன்று கலந்து பெருந்துளிகளாய்க் கீழேவிழுகின்றன. உயர்ந்த மேடாயுள்ள ஊர்களில் அம்மழைத்தாரைகள் சீக்கிரம்வந்திறங்குகிறபடியால் ஒன்றோடொன்று கலந்து பரிணமிக்க அவகாசமில்லாமற்போய்விடுகின்றது. அன்றியும் பள்ளத்தாக்கிலுள்ள ஊரில்வந்துவிழும் மழைத்தாரைகள் மேட்டுப்பாங்கிலுள்ள ஊரில்வந்துவிழும் மழைத்தாரைகளைவிட அதிக நீராவியோடு கலத்தலால் துளிகள்பெருத்து விழுகின்றன. மேட்டுப்பாங்கில் விழும் நீர்த்தாரைகள் அவ்வளவு நீராவியோடு கலவாமையால் துளிகள் சிறுத்துவிழுகின்றன.

9. சி.—மழைத்துளிகள் பெரிதாய் விழுமானால் மழை ஏன் நெடுநேரம் பெய்யாமல் அதிசீக்கிரம் நின்றுபோய் விடுகின்றது ?

ஆ.—ஏனெனில், மழைத்துளிகள் எப்போது பெரிதாய் விழுகின்றனவோ அப்போது மேகங்கள் ஆகாயத்தில் அதிகதூரமாய்ப் போய்க் கொண்டிருக்கின்றனவென்று நாம்அறியவேண்டும். அவ்வாறு நெடுந்தூரத்திலிருக்கும் மேகத்துக்கும் நாமிருக்கு மிடத்திற்கும் இடையில் ஏதோ அகன்மாத்தாய் குளிர்காற்று செல்லுகிறபடியால் உடனே அம்மேகத்தின் ஓர்பாகம் மாத்திரம் இறுகி ஜலமாய்க்கீழே விழுகின்றது. அம்மேகத்தின் மற்றப்பாகங்கள் அக்குளிர்காற்றின் சந்திக்குநேராகவராமற்போய்விடுகின்றன. ஆகையால் ஆரம்பத்திலே சடசடவென்று பெருந்துளிகளாய் மழைவிழுமானால் அது சற்றுநேரத்திலெல்லாம் நின்றுபோய் விடுகிறது. உஷ்ண ஆவிமயமாகிய மேகமும் குளிர்காற்றும் ஒன்றோடொன்று கூடியவளையிலே சமீபத்தில் தாக்கினாலன்றி மழை நீடித்துப் பெய்யாது.

10. சி.—சிலசமயங்களில் மழை ஏன் தூறுகிறது ?

ஆ.—ஏனெனில், அம்மழைக்குக் காரணமாயுள்ள மேகங்கள் பூமிக்கு அதிசமீபமாயிருக்கிறபடியால் அங்கிருந்து விழும் மழைத்தாரைகள் அக்கொஞ்சதூரத்திலே ஒன்றோடொன்று கலந்து பெரிதாவதற்கு இடமில்லாமற் போவதால் மழைத்தாரைகள் நுண்ணியதாய்த் தூறுகின்றன.

11. சி.—பெருந்துளிகளாய் விழாமல் நுண்ணிய தாரைகளாய் மழைபெய்ய ஆரம்பித்தால் நீடித்து ஏன் மழைபெய்கிறது ?

ஆ.—நுண்ணிய தாரைகள் கீழேவிழுவதினால் அம்மழைக்குக்காரணமாயுள்ள மேகம் அதிசமீபத்திலிருக்கிறதென்று நான்முன்சொல்லியபடியே அறிந்து கொள்ளவேண்டுமல்லவா ? மேகம் பூமிக்கு அதிசமீபத்தில் தங்கவும் கீழே குளிர்காற்று அதைத்தாக்கவுமிருக்கிறபடியால் நீராவிமயமாகிய அம்மேகம் அவ்வளவும் இறுகிச்சலமாய்க்கீழேவிழுமளவும் மழை பெய்துகொண்டே யிருக்கவேண்டும்.

12. சி.—மலைகளில் ஏன் சதாமழைபெய்து கொண்டும், அருவியோடிக்கொண்டு மிருக்கிறது ?

ஆ.—மலை கடினமான கற்கள் முதலியவற்றாலாகிய ஓங்கியுயர்ந்த உருவமானபடியால் அது சூரிய உஷ்ணத்தினால் வெப்பங்கொண்டபோதிலும் அதிசீக்கிரத்தில் உஷ்ணந்தணிந்து ஜில்லென்றுபோய்விடும். ஆகாயத்திலே மேகங்கள் போய்க்கொண்டிருக்கும் மார்க்கத்தில் இடையே இவை தடையாய் நிற்கிறபடியால் அம்மேகங்கள் அம்மலைகளில் தங்குகின்றன. அவ்வாறு தங்கிய மேகங்கள் அம்மலை உஷ்ணந்தணிந்து ஜில்லென்றிருக்கும்போது தண்ணீராய் இறுகவேண்டியதுதானே. அந்தத் தண்ணீரோ அருவியாய் ஓடுகின்றது.

13. சி.—நீராவி மேகமாக ஆகாயத்தில் இயங்கும்போது அதற்குக் கீழாகக்குளிர்காற்று வீசுகிறபடியினாலல்லவோ அம்மேகம் நீராயிறுகிக் கீழே விழுகின்றதென்று தேவரீர் முன்னேசொன்னீர்கள்? அப்படியானால் அந்நீராவி அத்தனையும் ஒரே மொத்தையாகப் பொத்தென்றல்லவோ ஜலமாய்க் கீழே விழவேண்டும்? அப்படிக்கன்றி அது நுண்ணியகம்பிபோல் கீழ்விழவேண்டியது என்?

ஆ.—சவாஸ்! நீகேட்டகேள்வியே கேள்வி! நீ சொல்லுகிறபடி ஒருபெரிய சமுத்திரத்தைப்போல் ஜலம் ஏககாலத்தில் கீழே விழுமானால் பூமியிலுள்ள சேதனாசேதனங்களெல்லாம் என்னபாடுபடும்! லோககாயகரது திருவருள் இதிலல்லவோ விளங்குகின்றது! ஒவ்வொரு பதார்த்தத்தின் அணுவுக்கும் மற்றொருபதார்த்தத்தின் அணுவை இழுக்கும் சக்தி இயற்கையிலிருக்கின்றது. ஆகையால் ஒவ்வொரு பொருளுக்கும் மற்றொரு பொருளைத் தன்னிடத்தில் இழுத்துக்கொள்ளும் சக்தியிருக்கின்றது. ஆகவே பெரிதாயிருக்கும் பதார்த்தம் தனக்குள்ள சக்திமிகுதியினாலே சிறிதாயுள்ள மற்றொரு பதார்த்தத்தைத் தன்னிடத்தில் இழுத்துக்கொள்ளும். இது காரணமாகத்தான் இப்பூமிக்குச் சமீபமாய் அதைக்காட்டிலும் சிறுத்துள்ள பொருள்களெல்லாம் அப்பூமியின் ஆகருஷணசக்தியினாலே அதனிடத்துப்போய் விழுகின்றன. நீராவியாயுள்ள அணுத்திரள்கள் ஒன்றோடொன்றுசேர்ந்து இறுகித்திரண்டு பரிணமித்தமாத்திரத்தில் அது பூமியின் ஆகருஷணசக்தியைக்கடக்க முடியாமல் அதன்வழியே சென்று கீழேதுளியாய் விழுகின்றன. ஆகையாலேதான் அணுத்திரள்கள் சிறு சிறுதுளிகளாய்ப் பரிணமித்தமாத்திரத்தில் பூமியில் வந்து விழுகின்றன.

14. சி.—மழையைப்பற்றி இப்போதுயான் கேட்டவினாக்களுக்குத் தாங்கள் கூறியவிடைகளைச் சித்தசமாதானத்துடன் யோசித்தபின் அந்தவிஷயத்தைப்பற்றியே இன்னும் சில சந்தேகங்களை இன்னுமொரு தினத்தில் கேட்கிறேன். சில பிராணிகளைப்பற்றிச் சில சந்தேகங்களெனக்குத் தோன்றுகின்றன. கால்கள் நீளமாயுள்ள பட்சிகளுக்குப் பின்பக்கத்துச் சிறகு என் சிறுத்திருக்கவேண்டும்?

ஆ.—நீர்ந்நிலங்களை ஜலத்தில் திருப்பி இயக்குவதற்குச் சுக்கான் எப்படி உபயோகமாகிறதோ அப்படியே பட்சிகளுக்குப் பின்பக்கத்துச் சிறகு உபயோகமாகின்றது. கால் நீளமாயிருக்கும் பட்சிகள் பறக்கும்போது அவைகள் தம்முடைய கால்களைப் பின்னே நேராக நீட்டிக்கொள்கிறபடியால் அக்கால்களே அவைகளுக்குச் சுக்கான் போல் உபயோகமாகின்றன. ஆகவே பின்பக்கத்தில் அவைகளுக்குத் துடுப்பைப்போன்ற சிறகு அனாவசியமும் வீண்பளுவுமாம். அனாவசியமான காரியத்தைக் கடவுள் ஒருபோதும் செய்கிறதேயில்லை.

15. சி.—ஜலத்தில் நீந்தி வசிக்கும் வாத்து முதலிய பட்சிகளுக்குக் கால் ஏன் குட்டையாயிருக்க வேண்டும்?

ஆ.—அவை நீண்டிருக்குமானால் நீந்தும்போது ஜலத்தின் அடிப்புறத்திலுள்ள கொடி பாசைமுதலியவை மாட்டிக்கொண்டு அவை இறந்துபோய்விடும்.

16. சி.—யானையின்கழுத்து ஏன் அவ்வளவு சிறுத்திருக்கவேண்டும்?

ஆ.—ஏனெனில், அது பாரமான தலையையும் பளுவான தந்தங்களையும் சுமக்கவேண்டியதானபடியினாலே அதற்குக்கழுத்து நீண்டிருக்குமானால் அவ்வளவு பாரத்தையும் சுமக்க அதற்கு முடியாமற் போய்விடும்.

17. சி.—யானைக்குப் பின்னிரண்டு கால்களும் முன்னிரண்டுகால்களைவிட ஏன் மிகவும் குறுகியும் முற்பக்கமாக வளைந்தும் இருக்க வேண்டும்?

ஆ.—இப்படியிருப்பதனால்தான் அது உட்கார்ந்து எழுந்திருக்கும்போது தன்பர்வதாகாரமான தேகத்தையும் தலையையும் தூக்குவதற் கநுகூலமாயிருக்கிறது. (இன்னும் வரும்.)

ஓர் காடியின் கதை.

20-ம். அத்தியாயம்.

விக்கிரமவீரன் தப்பித்துக்கொண்டு வெளிவருவது.

அவ்வறையில் விடப்பட்ட விக்கிரமவீரன் வழக்கப்படி அன்றிரவு அவ்வளவாகத் தூங்கவில்லை. அன்று பகலெல்லாம் ஒருவேலையும் செய்யாமல் உட்கார்ந்திருந்து இடையிடையே விக்கிரமவீரன் போதுமானவரையில் தூங்கிக்கொண்டிருந்தபடியாலும். ஒரு வீட்டிற்குள்ளிருக்கும் அறையில் இதுவரையில் தான் எப்போதுமிராதபடியாலும் அன்றிரவெல்லாம் அது விழித்துக்கொண்டும், அந்த அறைக்குள் முன்னும் பின்னுமாகத் திரிந்துகொண்டும், இனிமேல் தன் கதி எப்படியாகுமோவென்று சிந்தித்துக்கொண்டுமிருந்தது.

மறுபடியும் தான் வேறொரு எஜமானனுக்கு ஆட்பட வேண்டியதாகுமென்று அது நினைத்தது. முன்னே சொன்ன ஸ்தாலித்ததேகியே தனக்குப் புது

எஜமானனுகிற பட்சத்தில் சேடனுடன் தானிருந்தபோது அவனும் தானுமாக ஊரூராய்த் திரிந்ததுபோல் திரியவேண்டியிராமல் இருந்த வீட்டிலிருந்துகொண்டே நன்றாய்த் தூங்கிக்கொண்டிருக்கலாமென்று அது அபிப்பிராயப்பட்டது. அந்தஸ்தூலித்த தேகிக்குத் தடித்துக் கறுத்தபுருவமும் அது வளர்ந்து கீழே தொங்கிக்கொண்டிருந்தபடியால் அரைக்கண்பார்வையும் வெடித்த பெருங்குரலோசையுமிருந்ததனால் அவனைப்பார்க்க விக்கிரமவீரனுக்கு மிகவும்அருவருப்பாயிருந்தது. அவன் ஒருவேளை மிருகங்கள் அடைக்கப்பட்டிருந்த வண்டிக்குச் சொந்தக்காரனேயிருக்கலாமென்று அது நினைத்தமாத்திரத்தில் மனக்கலக்கமடைந்தது. நாள்முழுவதும் வண்டியில் அடைபட்டிருப்பதைவிடப் பேராபத்தானகாரியம் வேறொன்று மிராதென்றே அது கருதியபடியால் அதைப்பற்றி நினைக்க நினைக்க அதற்குச் சஞ்சலம் அதிகப்பட்டுக்கொண்டே வந்தது.

இவ்வறையினின்றும் தப்பித்துக்கொண்டு மலைக்கு ஓடிப்போய்விட்டால் அப்படிப்பட்ட அவஸ்தை நமக்கு நேரிடாதல்லவா என்றும், கூடுமானால் இவ்வறையினின்றும் வெளிப்பட்டுப்போவது யுக்தந்தானென்றும் விக்கிரமவீரன் தீர்மானித்தது. அது இப்போது தனியே இருந்தபடியாலும் அவ்வீட்டில் வேறே எவருடைய அரவமும் கேளாமல் நிச்சப்தமாயிருந்தபடியாலும் எல்லாரும் தூங்கிக்கொண்டுதானிருந்திருக்க வேண்டுமென்பதற்குச் சந்தேகமில்லையென்றுதெரிந்து, ஜன்னலைத் திறந்துபார்க்கலாமென்றுயோசனை பண்ணிக்கொண்டு அவ்வறைக்குள்ளிருந்த வாயிற்படிகளின் மேலேறிக் கதவைத்திறக்கப் பலமுறையும் இழுத்து அசக்கிப் பார்த்தது. அது வெளியே பூட்டித் தாளிடப்பட்டிருந்தபடியால் அதைத் திறக்கமுடியாமல் மறுபடியும் வந்து ஓர் புறத்தில் உட்கார்ந்து வியசனத்தோடு பார்த்துக்கொண்டிருந்தது. அது நிலவுகாலமானபடியால் அவ்வறைக்கு வெளியே வெளிச்சமாயிருந்தபோதிலும் அவ்வீதி நெருக்கமாயிருந்தபடியினால் அந்த அறைக்கு எதிரிலிருந்த கடையின்முற்பாகமன்றி வேறே எதுவும் விக்கிரமவீரன் கண்ணுக்குப் புலப்படவில்லை.

இச்சமயத்தில் எப்படியாவது வெளியேபோய் விட்டால் முன்னே தான் வந்த பெரியபாட்டையைக் கண்டுபிடித்து அங்கிருந்து நாட்டுப்புறத்துவழியாய்த் தன் வாசஸ்தலத்துக்கு மறுபடியும் போகலாமேயென்னும் தோற்றம் அதற்குண்டாயிற்று. இத்தோற்றம் உண்டானமாத்திரத்தில் தன் சகோதரனாகிய சுமுகன், தன் மாதாபிதாக்களாகிய மந்தானகன், உத்தமஜீவி ஆகிய இவர்களைப்பற்றியும், அக்கரடிகளெல்லாம் தன்னை இன்னும் ஒருதடவை பார்க்கும்போது அடையும் சந்தோஷத்தைப்பற்றியும், அக்கரடிகளுக்குத் தான் கண்ட புதுமைகளையெல்லாம் சொல்லிக்கொண்டுவந்தால் தன்னுடைய பராக்கிரமத்தைக்குறித்துஅவைகள் கொள்ளும் வியப்பைப்பற்றியும் விக்கிரமவீரன் நினைக்கத் தலைப்பட்டது,

இப்படிப்பட்ட சந்தோஷகரமான தோற்றங்களினாலே விக்கிரமவீரன் தூக்கமயக்கமாயிருந்தபோது திடீரென்று தரையிலிருந்த ஒருசந்திலிருந்து சுண்டெலியொன்று வெளிப்பட்டு அவ்வறையின் ஒருமூலையிலிருந்த அடுப்பண்டையோடி அங்கே கொட்டியிருந்த கரி சாம்பர் முதலியவற்றில் நுழைந்து மறைந்தது. அதைக்கண்ட விக்கிரமவீரன் சரேலென்று அதன் பின்னேயோடியும் அவ்வெலியைப் பிடிக்கமாட்டாமற் போய்விட்டது. நெடுநேரம்வரையில் அங்கிருந்த சாம்பர் முதலியவற்றைக் கிளறிப்பார்த்தும் அச்சுண்டெலி அகப்படாமலே போய்விட்டது.

இதற்குமுன்னே எப்போதும் இதுபோன்ற அறையில் விக்கிரமவீரன் வசித்திராதபடியால் அடுப்பிருக்கிற இடமும்அதற்கு நேராக மேலே புகைக்கூடு கட்டியிருக்கிற விஷயமும்அதற்குத் தெரியாது. இப்போதுஅச்சுண்டெலியைத் துரத்திக்கொண்டு போனபோது புகைக்கூடு ஒன்று மேலே வெற்றவெளியாயிருப்பதையும் அதன் மூலமாக ஆகாயந் தெரிவதையும் அக்கூடு தான் நுழைந்து வெளியேபோய் விடுவதற்கேற்ற அவ்வளவு பெரிதாயிருப்பதையும் விக்கிரமவீரன் அறிந்துகொண்டது. இவ்விஷயத்தையறிந்துகொண்டமாத்திரத்தில் அது சுண்டெலியைத் தேடிக்கொண்டுபோவதை விட்டுவிட்டுத் தப்பிவெளியே போவதற்கு வழியேற்பட்டதே யென்று சந்தோஷப்பட்டது.

நெடுநாளாக அந்த அடுப்பில் சமையல்செய்யாதிருந்தபடியால் அப்புகைக்கூடு கறுத்து ஒட்டறைபடியாமலிருந்தது. ஆயினும் சிறிது தும்புமாத்திரம் படிந்திருந்தது. மரங்களின் மேலேறுவதிலே அதிக சாமர்த்தியம் பெற்றிருந்த விக்கிரமவீரனுக்கு இப்புகைக்கூட்டின் மேலேறுவது அதிக சுலபமாயிருந்தது. அது உள்ளே நுழைந்து மேலேயேறி வெளியேவந்து வீதிக்குப் போவதற்கு எப்படி வழியென்று நாற்புறமும் வியப்போடு பார்த்துக்கொண்டிருக்கையில் அப்பட்டணமுழுவதும் நெடுந்தூரத்திலுள்ள மலைகளும் அதன் கண்ணுக்குப் புலப்பட்டன.

தூரத்தில் தோன்றிய மலை உன்னதமாகவும் கரடுமுரடாகவும் உச்சி சிறுத்தும் இராதபடியினால் அது தன் வாசஸ்தலமுள்ள மலையல்லவென்றும், இப்போது தோன்றுகிற மலைகளுக்குப் பின்னே தன்மலை இருக்கவேண்டுமென்றும் விக்கிரமவீரன் அபிப்பிராயப்பட்டு, அப்பட்டணத்து வீதியாகச் சென்றால் ஜனங்களின் கண்ணில் அகப்பட்டுக்கொள்ளக்கூடுமென்றும், புலங்களின் வழியாய் விழுந்தோடினால் புதர்களிலாவது புதர்களுக்கடியிலாவது நுழைந்தாகிலும் விருட்சங்களின்மேலே ஏறியாகிலும் தப்பித்துக் கொள்ளலாமென்றும் தீர்மானித்தது.

அப்புகைக்கூட்டிலிருந்து அவ்வீட்டுக்கூரையின்மேல் விக்கிரமவீரன் இறங்கியவுடனே அடுத்த எல்லா வீடுகளின்மேற்கூரைகளின் ஓரமாகவே வசதியான ஒரு சிறுபாதை ஏற்பட்டிருப்பதாய் அதற்குத் தெரியவந்தது. அப்பாதையின் ஓரத்தில் தாழ்ந்த கைப்பிடி சுவர்வைத்திருந்தபடியால் கீழே விழாதபடி போவதற்கு அநுகூலமாயிருந்தது. இவ்விடத்திலே வீடுகளெல்லாம் மிகவும் உயர்ந்திருந்தபடியால் அங்கிருந்து கீழே இறங்குவதற்கு அநுகூலப்படாமையினாலே, அந்தமேற் கூரைகளின்மேல் தோன்றிய வழியாகவே சிறிதுதூரம் போனபிறகு, வீடுகள் தாழ்ந்தும் உயர்ந்தும் இருந்தபடியால் எறி இறங்குவதற்கு அநுகூலமாயிருக்குமென்று விக்கிரமவீரன் தனக்குள்ளே தீர்மானித்துக்கொண்டது.

வீட்டுக் கூரைகளின்மேல் காணப்பட்டதென்று முன்னே நாம் சொல்லிய வழியாகவே விக்கிரமவீரன் போய்க்கொண்டிருந்தபோது அந்தந்த வீட்டு மேல் ஜன்னல்கள்வழியாக நிலாவெளிச்சத்தில் அதைப்பார்த்தவர்கள் திடுக்கிட்டுப் பயந்தார்கள். இவ்வாறு போய்க்கொண்டிருந்த விக்கிரமவீரன் வழியிலிருந்த ஒவ்வொரு அறைக்குள்ளும்இருப்பதைப் பார்ப்பதற்காக அங்கங்கே நின்றது. அதுமுதலில் எட்டிப்பார்த்த ஒரு அறைக்குள்ளே தும்பும் தூசும் நிறைந்து கேள்வி முறையில்லாமல் சில எலிகள் குடும்பமாக வாசஞ்செய்துகொண்டிருந்தன. மற்றொரு அறையில் மூன்று சிறுகுழந்தைகள் நிம்மதியாய்ப் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தன. விக்கிரமவீரன் மெல்ல அடிவைத்து அங்கு நின்றபடியால் அக்குழந்தைகள் விழித்துக்கொள்ளவில்லை. அது அக்குழந்தைகளைச் சிறிதுநேரம் நின்று பார்த்தபோது அதற்குள்ளேபோனு

ல் தான் தப்பித்துக்கொண்டு ஓடுவதற்கு இடையூறு நேரிடுமென்று அதற்குத் தெரிந்திருந்தும் அக்குழந்தைகளுக்குச் சமீபத்திற் போய் அப்படுக்கையில் படுத்துக்கொள்ளலாமா என்று விரும்பியது. ஆனால் ஜன்னல்கள் நன்றாய் மூடித்தாளிட்டிருந்தபடியால் அதன் விருப்பம் நிறைவேறாமையினாலே அதைவிட்டுச் சிறிது தூரம் சென்றது.

இவ்வாறு விக்கிரமவீரன் நிலாவெளிச்சத்தில் போய்க்கொண்டிருந்தபோது அநேக ஜன்னல்கள்மூடி எங்கும் நிச்சத்தமாயும், சிலஇடங்களிலே தூங்கிக்கொண்டிருந்தவர்கள் அது ஜன்னல்வழியாகப் போய்க்கொண்டிருந்தபோது திடுக்கிட்டுப் பயப்படுவதாயுமிருந்தபடியால் இப்படிப்பட்ட திவ்வியமான காட்சி நாம் எப்போதும் கண்டதில்லை, இனிகாணப் போவதுமில்லையென்று அது தனக்குள்ளே சந்தோஷமடைந்தது.

அந்தவீதியில் ஜோடுதைத்து ஜீவனம் செய்துவந்த ஏழை ஒருவன் இருந்தான். இரண்டொரு தினங்களுக்கு முன்னே இறந்துபோன தன்மனைவியையும் ஓரே குழந்தையையும் அன்றையதினந்தான் கொண்டுபோய் ஒன்றாய் அடைக்கலஞ் செய்துவந்தானாகையால் அவன் அன்று இராத்திரி நெடுநேரம் தன்னுடைய தௌர்ப்பாக்கியமான நிலைமையையும் ஸ்திதியையும் நினைத்துத் துக்கப்பட்டுக்கொண்டிருந்து படுத்துக்கொண்டும் அவனுக்குத் தூக்கம்பிடியாமையினால் ஆகாயத்தில் சந்திரனையும் அதை வந்து இடையிடையே மறைக்கும் வெண்மையான மேகங்களையும் விழித்துப் பார்த்துக்கொண்டேயிருந்தான். அப்போது சந்திரன் எவ்வளவு நிச்சப்தமாகவும் தாவள்யமாகவும் நட்சத்திரங்களுக்கு மத்தியிலே மேகங்களுக்கு நெடுந்தூரத்திற்கு மேலே அமுதகலசம்போற் பிரகாசித்துக்கொண்டிருந்தது! துக்கசாகரத்தில் மூழ்கிய அவ்வறியவன் அதைப் பார்த்துக்கொண்டேயிருந்தபோது அவனுடைய இளைப்பும் துக்கமும் சிறிதுநேரம் தணிந்தபடியால், இவ்வளவு துன்பத்திற் கிலக்காகித் தனியே துக்கப்பட்டுக் கொண்டிருக்கிற எனக்கு, சனவான்களென்றும் ஏழைகளென்றும் வித்தியாசம் பாராமல் யாவர்க்கும் ஒருமிக்கத் தண்ணிலவை வீசிக்கொண்டிருக்கிற இவ்வெண்மதி எவ்வளவு பரிகாரமாயிருக்கிறது! என்பதுபோன்ற தோற்றங்களினாலே அவன் சிறிதுமனம் தேறிக்கண்ணைச் சற்றே மூடி ஒருவாறு தூக்கமயக்கமாயிருந்தான். அந்தச்சமயத்தில் ஜன்னலின் கண்ணாடிக்கதவை யாரோ சிறிது தட்டினதுபோல் சப்தம் கேட்டது. உடனே அவ்வேழை திடுக்கிட்டுக் கண்ணை விழித்துப்பார்த்தான். அப்போது விக்கிரமவீரன் வந்து அவ்விடத்தில் எட்டிப்பார்த்த சமயம். மயிர்நிறைந்த அதன் கறுத்ததலையையும் கூரியமூக்கையும் அதற்கிட்டிருந்த இருப்புவாயுறையையும் அவன் ஜன்னலுக்குச் சமீபமாகக்கண்டான். அதைக்கண்டமாத்திரத்தில் அவன் எழுந்து தன் படுக்கையில் உட்கார்ந்துகொண்டு அதை அடிக்கப் பிரயத்தனப் படுபவன்போல முன்னும் பின்னுமாகக் கையை ஆட்டிக்கொண்டு அதைத் துரத்திவிடுவதற்காக எவ்வளவு உரக்கக் கூவவேண்டுமோ அவ்வளவு உரக்கக் கூச்சல் போட்டான்.

இக்கூச்சலைக் கேட்டமாத்திரத்தில் விக்கிரமவீரன் திபதிபவென்று ஓடத் தலைப்பட்டது. அவனுடைய கூச்சலை மற்றவர்களும் கேட்டார்கள். அவ்வீதியில் இருபக்கத்திலுமிருந்த ஜன்னல்களில் அநேகர் எட்டிப்பார்த்தார்கள். ஜனங்கள் ஓடுகளின்மேலும் புகைக்கூடுகளின்மேலும் தாவிக் கூரையின் மேல் விக்கிரமவீரன் போவதைக் கண்டமாத்திரத்தில் அக்கம் பக்கங்களிலிருந்த எல்லோரையும் எழுப்பிவிட்டார்கள். அவரவர்கள் தங்கள்தங்கள் வீட்டு ஜன்னல்களைத் திறந்துவிட்டார்கள். சிலர் ஆவலோடு விக்கிரமவீரனைப் பின்னே துரத்திப் பிடிக்கத் தலைப்பட்டார்கள். தன் வேலையைப்பார்த்துக்கொண்

விக்கிரமவீரன் தான்,

டு போகாமல் அங்கங்குள்ள புதுமைகளைக் கண்டறியவேண்டுமென்று விக்கிரமவீரன்கொண்ட வீணான விருப்பங் காரணமாக மறுபடியும் அது அபாயத்திற் குள்ளாயிற்று.

தன்னைத் துரத்திக்கொண்டு வருபவர்கள் கையில் அகப்படாமல் தப்பிப்பிழைக்கவேண்டுமானால் கீழே தரையில் குதித்து ஓடுவதைவிட வேறே கதியில்லையென்று விக்கிரமவீரன் தீர்மானித்தது. சமீபத்திலிருந்த ஒருவீட்டிலே மேலிருந்து கீழே நீண்ட ஒருகுழாய் வைத்திருந்தது. அது விக்கிரமவீரனுக்கு ஏணிபோலிருந்தபடியால் அதைப் பற்றிக்கொண்டு அதிக விரைவாய்க் கீழே இறங்கத் தலைப்பட்டது. அக்குழாய்க்கடியில் கூரையினின்றுவரும் தண்ணீரைப் பிடிப்பதற்காக ஒருபெருந் தொட்டி கீழேவைத்திராவிடில் விக்கிரமவீரன் தப்பித்துக்கொண்டு ஓடிப்போயிருக்கும். அந்தத்தொட்டி வெறுந்தொட்டியாயிருந்தபடியாலும், குழாயைவிட்டுவிட்டு விக்கிரமவீரன் நிலத்தில் குதிக்கிறேனென்று நினைத்து அத்தொட்டியில் தலைகீழாகப் பொத்தென்று விழுந்தபடியாலும், இதன் பளுவைத்தாங்காமல் அப்பெருந்தொட்டி ஒருபுறமாகச் சாய்ந்து பொத்தென்று பெரும் சப்தத்தோடு கீழேவீழ்ந்தது. உடனே அவ்வீட்டிலிருந்து ஆள்கள் நாய்களோடு திபுதிபவென்று ஓடிவந்து கயிறுகளைக்கொண்டு விக்கிரமவீரனைக் கட்டிக் கைதியாக்கிவிட்டார்கள்.

இதற்குள்ளே இந்த ஆரவாரத்தைக் கேட்டு விக்கிரமவீரனுடைய புதுஎஜமானனாகிய ஸ்தூலதேகி இரைப்பெடுக்கப் பெருமூச்சுவிட்டுக்கொண்டுஅவ்விடத்திற்கு ஓடிவந்து அது தன் கரடிதானென்று கூறினான். அவன் தன்கையிலிருந்த ஒரு கனத்ததடியினால் விக்கிரமவீரனை நன்றாய்ப் புடைத்தும் உதைத்தும் அது தன் கரடிதானென்பதைப் போதுமானவரையில் யாவர்க்கும் மெய்ப்பித்தான். வெளிச்சமும் காற்றுமில்லாத வண்டிக்குள்ளே பலகாட்டுமிருகங்களோடுகூட வாழ்நாள் கழிக்க நமக்கு விதியிருக்கிறபடியால் இந்த அடியும் உதையும் ஒருபொருளல்லவென்று விக்கிரமவீரன் தனக்குள்ளே மனந்தேறி அந்த அடியையும் உதையையும் பொறுத்துக்கொண்டிருந்தது.

உதரபாஷிதம்.

உதரபாஷிதமென்பது வயிற்றினின்றும் பேசும் ஒருவித வித்தையென்று பொருள்படும். இந்த வித்தையைக் காட்டுகிறவர்கள் உதடு - பல் - நா முதலிய அவயவங்களை இயக்காமல் நெடுந்தூரத்திலிருந்து சப்தம்வருவதுபோல் பேசும் சாமர்த்தியம் பெற்றிருக்கிறபடியால்,இந்த சப்தம் ஒருவேளை வயிற்றினின்றும் வருகிறதுபோலுமெனச் சிலர்ஆதியில் தப்பபிப்பிராயங்கொண்டதனால் இவ்வித்தைக்குஉதரபாஷிதம் என்னும்பெயர் அக்காலத்தில்அவர்களாலிடப்பட்டது. பிற்காலத்தில் இந்தவிஷயத்தை நன்றாய் ஆராய்ச்சிசெய்து பார்த்த சாஸ்திரபண்டிதர்கள்-இவ்வித்தைக்காரர்கள் வயிற்றினின்றும் வாஸ்தவத்தில் பேசுவதில்லையென்றும், சாதாரணமாய்த் தேகத்தில் சப்தம் பிறப்பதற்கிடமாகிய குரல்வளையிலுள்ள தொனிநரம்புகளைக் கொண்டே அவர்கள் பேசுகிறார்களென்றும், அவ்வாறு பேசும்போது நாவைமேல் உண்ணுவண்டைகொண்டுபோய் வைத்துத்தா

ண்ட-உதடு - பல் முதலிய கருவிகளை எவ்வளவும் இயக்காமலே பேசுகிறார்களென்றும் கண்டறிந்தார்கள். உதரத்தினின்றும் பாஷைபிறப்பதில்லையென்று கண்டறிந்தும் அவர்கள் அந்த வித்தைக்கு வேறே நூதனமான பெயரைக் கொடாமல் நெடுநாளாய் வழங்கி வந்த அப்பெயரையே தாமும் கையாண்டுவருகிறார்கள். இந்த வித்தைக்காரர்கள் பெரும்பாலும் தந்திரசாலிகளாகவே யிருக்கிறார்கள். இவ்வித்தையின் மூலகாரணத்தை நன்றாயறிந்து நாகரீகமடைந்த தேசத்தார் இவ்வித்தைக்காரரை அவ்வித்தைக்காக மாத்திரம் ஒருவாறாக வியந்து ஏதோ சன்மானம் கொடுத்தனுப்புவார்களே யன்றி மற்றப்படி அவர்களால் மதிமோசம்போகார். நாகரீக மற்றதேசத்திலோ அப்படியல்ல.

நெடுங்காலமாக நாகரீகமற்ற தேசங்களிலே இந்த வித்தைக்காரர்கள் மிகவும் நன்குமதிக்கப்பட்டு வந்தார்கள். இப்போதும் சீர்திருத்தம் பெறாத சில தேசங்களிலே இவ்வித்தைக்காரர்கள்செய்யும் ஆரவாரம் பெரிது பெரிது. 1886-ம் ௵த்தில் ஆப்ரிகா காண்டத்தின் மேற்கரையோரமாகவுள்ள அஷாண்டி என்னும் பிரதேசத்தில் இவ்வித்தை சம்பந்தமான விர்த்தாந்தமொன்றுநடந்தது. அவ்வூர் ஜாதியாரெல்லாம் ஏதோ சில பொதுவானகாரியங்களுக்காக ஏதோஒருவகையான வர்த்தனை செலுத்தவேண்டுமென்று ஒரு ஜாதிக் கட்டுப்பாடு செய்துகொண்டிருந்தார்கள். அவர்களுக்குள்ளே ஒருவன் அந்த கட்டுப்பாட்டுக் கடங்காமல் வர்த்தனைகொடுக்க மாட்டேனென்றான். ஜாதிக் கட்டுப்பாட்டுக்கு அடங்காத அவன் விஷயத்தில் கோபங்கொண்ட அவ்வூர்த்தலைவரான குருக்களானவர் சமயம் பார்த்துக்கொண்டேயிருந்து, அவ்வூரானொருவன் திடீரென்று இறந்து போனபோது அவ்வூர் ஜனங்களை யெல்லாம் ஒன்றாக ஓரிடத்திற்சேர்த்து அவர்களைப் பார்த்து, இப்போது ஒருவித வியாதியுமில்லாமலே இறந்துபோன இவன் யாராலேயோ கொல்லப்பட்டிருக்க வேண்டும், கொலையாளி இன்னானென்பதைக்கண்டு பிடிப்பதற்காக மந்திர உச்சாடனஞ்செய்து நம்முடைய இஷ்டதேவதையை நோக்கிக் குறிகேட்கவேண்டுமென்றார். அதற்கு அவ்வூரார்யாவரும் வழக்கப்படி சம்மதித்தார்கள். உடனே அந்தக்குருக்கள் நம் ஊர்ப்பூசாரியைப்போல் உடம்பெல்லாம் தழை முதலியவற்றைத் தரித்துக்கொண்டும், கையில் ஒருபெரிய கொத்துமணியைப் பிடித்துக்கொண்டும், கோரமானவேஷம் போட்டுக்கொண்டும், ஒருபெரிய மரப்பதுமையை விகாரமாய்ச் சிங்காரித்து ஒரு புறத்தில் நிற்கவைத்தார். பிறகு அந்தக் குருக்கள் மந்திர உச்சாடனம்பண்ணி அத்தேவதைக்கு நெடுநேரம் சோடசோப சாரங்களைச் செய்து குறிகேட்கத்தலைப்பட்டார். அப்போது அவர் அங்குவந்திருந்த ஒவ்வொருவருடைய பெயரையும் சொல்லி அம்மரப்பதுமையை நோக்கி; “இவரா அவனைக்கொன்றவர்?” “இவரா அவனைக் கொன்றவர்” என்று அப்பதுமைக்கு நெடுந்தூரத்திலிரு

ந்தே கூவிக்கேட்டுக்கொண்டு வந்தார். அவ்வொவ்வொரு கேள்விக்கும் "அல்ல, அல்ல" என்னும் சப்தம் அப்பதுமையினிடமாகத் தோன்றியதுபோல் யாவருக்கும் கேட்டது. இவ்வாறு அந்தக் குருக்கள் வினுக்கள் கேட்டுக்கொண்டே வருகையில் முன்னே வர்த்தனை செலுத்தாதவனுடைய பெயர்வந்த மாத்திரத்தில் "ஆம், இவன் தான்." என்னும் சப்தம் அப்பதுமையினிடமாக வெளிவந்ததுபோல் யாவர்க்குங்கேட்டது. உடனேகொலையாளி அவன்தானென்று நிச்சயித்துத் தண்டவினைமாக்கள் அவனைக் கொண்டுபோய்க் கொன்று விட்டார்கள். இவ்வாறு குருக்கள்கேள்வி கேட்டுக்கொண்டே வருகையில் அங்கிருந்த மூடஜனங்கள் அத்தனைபெயரும் கையைத் தூக்கிக்கொண்டும், கீழே தலைகுனிந்து நமஸ்கரித்துக்கொண்டும் மனநடுக்கத்துடன் தங்கள் தங்கள்இஷ்டதேவதைகளை ஸ்தோத்திரம்செய்து கொண்டிருந்தார்கள்.

அந்தக்குருக்கள் உதரபாஷிதத்தில் மஹாநிபுணர். அவர் வினுக்கள் கேட்டபோதுமாத்திரம் வாய்திறந்து சாதாரணமாய் உரக்கத் தூரத்திருந்தே கூவினுர். அவ்விறுக்களுக்கு விடைசொல்லிக்கொண்டு வந்தவரும் அவரே. அந்தக்குருக்கள் விடை சொல்லிக்கொண்டு வந்தபோது மாத்திரம் சப்தம் அப்பதுமையினின்றும் வருவதுபோல் கைவிரல்சுட்டிக் காட்டியபடியாலும், அங்கிருந்த எல்லோருடைய மனமும் கண்ணும் அப்பதுமையினிடத்தே பதிந்திருந்தபடியாலும், அப்பதுமைதான் விடைகூறப் போகிறதென்று யாவரும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தபடியாலும் அம்மூடஜனங்கள் அவ்வளவு தூரம் மதிமோசம் போனார்கள்.

பூர்வத்தில் பேர்ஷியா - க்ரீஸ் - ஈஜிப்ட் முதலிய தேசங்களிலே ஜனக்கட்டுப்பாடு உண்டாவதற்காக உதரபாஷிதம் என்னும் இவ்வித்தையில் சிலர் பரமரகசியமாகப் பயின்று வந்திருக்கவேண்டுமென்று தெரியவருகிறது. தூரத்திலுள்ள ஒருபொருளிடமாகத்தொனி தோன்றுவதுபோற் காட்டுவதுதான் இவ்வித்தையின் முக்கியமான சாமர்த்தியம். பூர்வத்தில் அந்தரத்திலே அசரீரிவாக்குண்டானதென்றும், செடிகளின் மரப்பொந்துகளிலிருந்து சில பிரதியுத்தரங்கள் தோன்றினவென்றும், இறந்துபோனவர்கள்வந்து தம்முடைய சந்ததியாருக்குத் தம் அபிப்பிராயத்தைச் சப்தமூலமாகத் தெரிவித்தார்களென்றும், சிலமிருகங்களும் பட்சிகளும் மனிதருடைய கேள்விகளுக்கு விடைகொடுத்தனவென்றும் நாம் சரித்திரங்களிலே வாசிக்கும் சில விஷயங்கள் உதரபாஷிதம்போன்ற சிலதந்திரங்களின் காரியங்களென்று சிலர் நினைக்கக்கூடும். சில அவ்வாறிருக்கினுமிருக்கலாம். அதனாலேயே, சர்வேஸ்வரரொருவர் உண்டென்பதையும், அவர் எதார்த்தத்தில் சில சந்தர்ப்பங்களிலே பக்திமான்களுக்கு அருவமாயிருந்து வசனித்து அநுக்கிரகித்தா ரென்பதையும் பொய்யென்று சொல்ல எம்மனம் எழவில்லை. சராசரியில் யாவற்றையும்

நேருங்கே பொய்யென்றும் தந்திரமென்றுங் கூறிவிடுவது நடுவு நிலைமையுடன் ஆராய்ச்சியல்புடையோர்க்கழகன்று.

[நம்முடைய இந்தியாதேசத்திலும் உதரபாஷிதநிபுணர்கள் சிலரிருப்பதாகத் தெரியவருகிறது. 1874-ம்௵ நாம் அப்படிப்பட்ட ஒருவரைக்கண்டனம். அவர்தென்னாட்டுப் பிராமணர். இச்சென்னையில் சற்றேறக்குறைய 200 பெயர் கூடியிருந்த சபையின் ஒருபுறத்திலே அவர் பத்மாசனமிட்டு உட்கார்ந்து கொண்டார். உடனே ஐந்து நிமிஷம் வரையில் தமுக்குச்சப்தம் கேட்டது. அந்தச் சப்தம்நின்ற உடனே அவர் தம்கையிலிருந்த மியுனிஸிபல் சம்பந்தமான ஓர் ஏல விளம்பரப்பத்திரிகையைச் சாதாரணமாய் வாய்திறந்து உரக்க வாசித்துமுடித்தார். உடனே முன்போல் தமுக்குச்சப்தமும் அனேகபிள்ளைகளுடைய பேரிரைச்சலும் கரகோஷ்டமும் மூன்றுநான்கு நிமிஷம் வரையில் கேட்டன. அவர் உரக்க ஏலவிளம்பரப் பத்திரிகையை வாசித்தபோது மாத்திரம்அது அக்கம்பக்கங்களில் ஒருவாறுகக் கேட்டிருக்கலாம். முன்னும் பின்னுங்கேட்ட தமுக்குச் சப்தமும் மற்ற ஓசைகளு மாத்திரம் அங்கிருந்த சபைக்குத்தான் கேட்டன. உண்மையைக் கண்டறிவதற்காக அவ்வீட்டு வாயிற்படியைக்கடந்து வீதியில் நின்று பார்த்த எமக்கும் அந்தச் சப்தம்கேட்டிலது. தமுக்கோசை முதலிய சப்தங்களுண்டானபோது அம்மறையோர் சற்றும் வாய்முதலிய அவயவங்களை அசக்கினரில்லை.

இன்னும் சில வேடிக்கைகள் செய்தானபிறகு அவ்வேதியர் தாம் டம்பாசாரியென்று தம்மைக்கூறி ஒருபீடத்தின்மேல் உட்கார்ந்துகொண்டு சிவிகையேறிச் செல்வதுபோல் கரசரணாதி அவயவங்களினால் நடித்தார். அப்போது சமார் இருபது சிவிகையாட்கள் (போய்கள்) பெருங்கூச்குரலிட்டு அச்சிவிகையைத் தூக்கிக்கொண்டு சென்றால்என்ன மாதிரியான சப்தம்கேட்டிருக்கலாமோ அம்மாதிரியான ஏ ஓ என்னும் சப்தம்கேட்டது. இதுவும் அச்சபைக்கு மாத்திரம் கேட்டதேயன்றி அவ்வீட்டுக்குவெளியே யிருந்த எவர்க்கும் கேட்டிலது. இவ்வகையான சப்தங்கள் நெடுந்தூரத்திலே எவ்விடத்திருந்தோ வருவனபோல்கேட்டன. அந்தச்சமயங்களில் அவ்வந்தணர் எவரிடத்தும் பேசாமல் மௌனமாயிருந்தார். அவரைக்கவனித்துக்கொண்டிருந்த நாம் இடையிடையே அவருடைய இரண்டுபக்கங்களும் கண்டமும் சிறிது விம்முவதைப் பார்த்தோம். அவர் அன்று காட்டியது ஓர்வகை உதரபாஷித வித்தையென்பதற் கையமின்று. பத்.]

சம்பாஷணையைப்பற்றிய விதிகள்.

எல்லா ஜீவராசிகளினும் மேம்பட்ட நமக்குத்தான் சொற்களுருபமாக ஒருவர் கருத்தை மற்றொருவருக்கு வெளிப்படுத்துவதற்கேற்ற சக்தியை ஜகதீசர் அமைத்திருக்கின்றார். அப்படிப்பட்ட அருமையான சக்தியை நாம் நன்றாய் உபயோகித்து வருவோமாகில் அதனாலாகிய பெரும்பயனை நாம் உலகத்தில் அடையலாம். அங்ஙனமின்றி அதைத் துர்வினியோகம் செய்வோமாகில் அதனாலாகிய பெரும்பயன்களை இழப்பதுமன்றி எல்லோருடனும் சிராப்பகை முதலியதீமைகளும் விளையும். ஆகையால் நாம் எவரோடாவது சம்பாஷிக்கத் தொடங்குகையில் அடியிற்கண்ட விஷயங்களை ஞாபகத்தில் வைக்கவேண்டும்:—

1. யாருடைய குணங்களைப்பற்றி நமக்கு நன்றாய்த் தெரியாதோ அப்படிப்பட்டவரிடத்தில் நீடித்துப் பேசலாகாது. ஏனெனில் நம்முடைய குணமும் அவருடைய குணமும் ஒவ்வாவிடில் நாம் நீடித்துப் பேசப்பேச அவருக்கு அருவருப்புண்டாகும்: அப்படிப்பட்டவரிடத்தில் நாம் பலவிஷயங்களைப்பற்றிப் பேசவேண்டியதாயிருக்குமானால் ஏககாலத்தில் அவ்வெல்லா விஷயங்களையும்பற்றிப்பேசாமல் ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு விஷயத்தைப்பற்றி மாத்திரம் பேசி அம்மட்டில் சம்பாஷணையை நிறுத்திச் செலவு பெற்றுக்கொண்டுபோய்விடவேண்டும்.

2. அனேகர் எந்தவிஷயத்தை நாடிப் பிறரிடத்திற் போகின்றார்களோ அந்த விஷயத்தைப்பற்றிக் கூடிய சிக்கிரத்திற் பேசத்தொடங்குவதில்லை. வீண் விவகாரங்களைப்பற்றி நெடுநேரம் பேசிக்கொண்டேயிருந்து இறுதியில் எழுந்துபோகும்போது தம்முடைய கருத்தைவெளியிடுவது வழக்கம். இவ்வாறு நாம் செய்வோமாகில் நாம் யாரிடத்தில் ஒன்றை நாடிப்போகின்றோமோ அவர்கள் நமக்கு வேண்டியதைப் பூரணமாய் அவகாசமாகக் கேட்டு நிதானிக்கக் கூடாமற் போய்விடுவார்கள். அன்றியும் நாம் நாடிவந்த விஷயத்தைத் தங்களைக்கேட்க நமக்கே அகத்தில் லச்சையாயிருக்கிறதென்று அவர்கள் நினைக்கநேரிடும். அவர்கள் அவ்வாறு அபிப்பிராயப்படுகிறபட்சத்திலே நம்மிடத்தில் மதிப்புகெட்டு, நம் காரியத்தை நிறைவேற்றி வைக்கவேண்டுமென்கிற பொறுப்பு அவர்களுக்கிராமற் போய்விடும்.

3. சிலர் பிறரிடத்தில் சம்பாஷித்துக் கொண்டிருக்கும்போது அவர்களுடைய அங்க வஸ்திரத்தையாவது வேறே எதையாவது பற்றி இழுத்துக்கொண்டே பேசுவது வழக்கம். அவர்கள் அவ்வாறு செய்வது-கேட்போருடைய நாட்டம் வேறொன்றில் சென்று கொண்டிருக்கிறபடியால் தாம் பேசுவதை அவர்கள் கவனிக்கவேண்டுமென்று கருதியேயாம். இத்துர்வழக்கத்தை நாம் மறந்தும் அநுசரிக்கலாகாது. ஏனெனில் நாம் சம்பாஷித்துக் கொண்டிருக்கும்போது வேறொரு விஷயத்தை ஒருவன் கவனிப்பது நாம் சொல்லும் விஷயத்தில் அவனுக்கு உபேட்சையுண்டாகியோ அல்லது அவ்வேறொருவிஷயம் நாம் சொல்லும் விஷயத்தைக்காட்டிலும் அதிக முக்கியமானதென்று கருதியோ அல்லவா? அப்படிப்பட்ட சமயத்தில் நாம் உடனே சம்பாஷணையை நிறுத்திவிடவேண்டும். அவ்வாறு நிறுத்தாமல் நாம் பேசுவதெல்லாம் பயனற்றதாய் முடியும். அன்றியும் அப்படிப்பட்ட சமயத்தில் நாம் பேசிக்கொண்டுவரும் விஷயங்களை அவன் எதார்த்தத்திலே கவனிக்காமலிருக்கையில் அவன் அதைக் கவனிக்கிறானென்று நாம் தப்பபிப்பிராயங்கொள்ள நேரிடும். நாம்சொல்லும்விஷயங்களை அவன்கவனியாமையினாலே அவற்றின்படி அவன் நடவாமற்போனால் அவன் விஷயத்தில் நமக்கு அருவருப்புண்டாகும். உடனே நட்புக்கு விரோதம் நேரிடும்.

4, சிலர் கூடியிருக்கும் சபையிலே நம்மிலும் தாழ்ந்தவர்களிருந்தாலுஞ்சரி நமக்குச்சமானமானவர்களிருந்தாலுஞ்சரி நம்மினும் உயர்ந்தவர்களிருந்தாலுஞ்சரி கூடியவரையில் நம்மைப்பற்றி நாமே பேசிக்கொள்ளாமலிருக்கமுயலவேண்டும். கல்வி கேள்விகளில் எவ்வளவு சிறந்தவர்களாயிருக்கினும் அனேகரிடத்தில் இத்துர்க்குணமுண்டு. நம்மைப்பற்றி நாமேசொல்லும் விஷயம் எவ்வளவு எதார்த்தமானதாயிருக்கினும் அது கேட்போருக்கு அருவருப்பைத் தராமற்போகாது. நாம் அவ்வாறு பேசிக்கொண்டிருக்கும்போது பிறர் முகமலர்ச்சியோடு கேட்டுக்கொண்டிருந்தபோதினும் அவர்கள் நமக்கு எவ்வளவு பிராண நேசர்களாயிருந்தாலும் அவர்கள் முகமலர்ச்சியை ஒருபோதும் நாம் நம்பலாகாது. "மக்கள்மனம்வேறு செய்கையும்வேறு." என்ற முதியோர் வசனத்தை நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

(இன்னும்வரும்.)

வர்த்தமானக் குறிப்புகள்.

விசித்திரமான ஒருமனிதன்.—பேர்லின் என்னும் நகரத்திலுள்ள ஒருவைத்திய வித்தியாசாலையிலே அவ்வித்தியாவிசாரணைத் தலைவர்கள் ஒருமனிதனை மூன்றுவருஷகாலமாக அவ்விடத்தில்வைத்து வித்தியார்த்திகளுக்கும் மற்றவர்களுக்கும் காட்டி வருகிறார்கள். அவனுடையதேகம் கண்ணாடிபோல் ஊடுருவிப் பார்க்கத்தக்கதா யிருக்கிறது. இரத்ததாதுக்கள் - பல்வேறு நாம்புகள் முதலிய அகத்துறுப்புக்களையும் உதிரவோட்டம்முதலிய விசித்திரங்களையும் ஸ்படிகம்போன்ற அவன்தேகத்தில் தெளிவாகக்காணலாம். அவனுடைய துடையிலும் காலிலும் எலும்புகள் கிடையா. அவனுக்கு நடக்கச் சக்தியில்லாமையினால் அவனை ஒரு நாற்காலியிலிருத்தி இங்குமங்கும் கொண்டுபோகிறார்கள்.

பங்கா இழுப்பதற்கான ஒரு தந்திரம்.—கல்கத்தாவிலுள்ள லாம்பர்ட் என்னும் ஒரு என்ஜினீயர் பங்கா இழுப்பதற்கு ஒரு தந்திரங்கண்டு பிடித்திருக்கிறார். வீட்டுக்கூரையின்மேல் தொட்டியிலே வார்த்திருக்கும் ஜலம் குழாய்வழியாயிறங்கி அறைக்குட்புகுந்து அங்குள்ள பங்காக்களை இழுக்கும்படி அவர் உபாயம் செய்திருக்கிறார். ஜலம்மேலிருந்து கீழேவிழும்வேகமே அப்பங்காக்களை இயக்கும் சக்தியாயமைந்திருக்கிறது. சலபமானால் இவ்வித உபாயத்தை யாவரும் அநுசரிப்பார்களாகில் நலமாயிருக்கும்.

பெண்வீரம்.—க்வேட்டா என்னும் பெயருடைய நீராவிக்கப்பலொன்று சில தினங்களுக்குமுன்னே முழுகிப்போனபொழுது அதிலிருந்த மிஸ்-ஷ என்னும் ஒரு பெண் ஜலத்திலே முப்பது மணிநேரம் எவ்வித உதவியுமில்லாமலே நீந்துநிலையிலிருந்து தப்பித்துக்கொண்டனளாம். புருஷர்கள் அநேகர் அக்காலத்தில் கடலுக்கிரையாக இவ்வொரு பெண்மனோதைரியத்தை விடாமல் நீந்திக்கொண்டிருந்தது வியப்பே! கல்விசாலைகளில் சிறுவர்களுக்கு நீந்தக்கற்றுக் கொடுப்பார்களாகில் பெருத்த உபகாரமாகும்.

PRINTED AT THE ALBINION PRESS.—MADRAS.

146680